RBI/2008-2010/61
DGBA.GAD.No.H-3/31.05.001/2009-10 ஜூலை 1, 2009

அனைத்து முகைமை வங்கிகளுக்கும்

அன்புடையீர்,

**தொகுப்புச் சுற்றறிக்கை – முகைமை வங்கிகளின் மூலமாக ஓய்வூதியம் வழங்கல்**

இந்திய ரிசர்வ் வங்கி, அரசு ஓய்வூதியத்தை முகைமை வங்கிகள் மூலமாக அளிப்பதற்கு பல்வேறு உத்தரவுகளை வெளியிடுகிறது. இந்த உத்தரவுகளை நம்முடைய தொகுப்புச் சுற்றறிக்கையான RBI/2008-09/82 (DGBA. GAD.No.H-09/31.05.001/2008-09), 2008 ஜூலை 1 தேதியிட்டதில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இவ்விஷயத்தில் 2009 ஜூன் 30 வரை புதுப்பிக்கப்பட்ட தொகுப்புச் சுற்றறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. எங்களது இணைய தளமான www.rbi.org.in. ல் இச்சுற்றறிக்கையை காணமுடியும்.

2. தயவு செய்து பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அளிக்கவும்

தங்கள் உண்மையுள்ள

(B.K.மிஸ்ரா)
உதவி பொது மேலாளர்

## தொகுப்புச் சுற்றறிக்கை – ஓய்வூதியத்தை முகைமை வங்கிகள் மூலமாக அளிப்பது

பொதுத்துறை வங்கிகள் மூலமாக பல்வேறு, ஓய்வூதியம் அளிக்கும் திட்டங்களின்கீழ், அரசாங்க ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் அளிப்பது.

### 1. முகவுரை

ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் அளிப்பது, அந்தந்த அமைச்சகங்கள்/துறைகள் இவற்றால் தயாரிக்கப்பட்ட பொருத்தமான திட்டங்களால் நிர்வகிக்கப்படுகிறது. இதற்கு கணக்குகள் கட்டுப்பாட்டு ஆணையர் நிதி அமைச்சகம், மத்திய அரசு அல்லது மாநில அரசுகள் இவற்றின் ஒப்புதல் தேவைப்படுகிறது. இதில் அடிப்படை ஓய்வூதியம், அதிகரிக்கப்பட்ட அகவிலை நிவாரணம் மற்றும் அரசு அவ்வப்போது அறிவிக்கும் சலுகைகள் ஆகியவை அடங்கும். இது தொடர்பாக வெளியிடப்பட்ட பல்வேறு சுற்றறிக்கைகள் தொகுக்கப்பட்டு விவரத்திற்காகக் கொடுக்கப்பட்டுள்ளது.

**2.** மாநில அரசின் ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலை நிவாரணம் பற்றிய அரசாணைகளை மாநில அரசுகளின் இணையதளங்களில் பட்டியலிடப்பட வேண்டும்.
**(Ref: DGBA.GAD.No.4-416/45.01.003/2002-03, 2003 மார்ச் 21 & DGBA.GAD.No.770/ 45.01.003/ 2003-04, 2004 பிப்ரவரி 25 தேதியிட்டது)**
பயனாளிக்கு அகவிலை நிவாரண ஆணைகள் பிறப்பித்தலுக்கும் அகவிலை நிவாரணம் அளிப்பதற்கும் உள்ள கால இடைவெளியை நிவர்த்தி செய்யவும் மூத்த குடிமக்களுக்கு உடனடி சேவை வழங்கிடவும், ஓய்வூதியம் வழங்கிடும் முகைமை வங்கிகள், மாநிலத் தலைநகரத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் தலைமை அலுவலகங்கள்/ பிராந்திய அலுவலகங்கள் ஆகியவைகளுக்கு அரசாங்கத்தால் அளிக்கப்படும் ஆணைகளின் அடிப்படையில் செயல்பட வேண்டும்.

மேலும், மாநில அரசுகளின் பாதுகாப்பான இணையதளத்தில் சுற்றறிக்கைகள் பட்டியலிடப்பட வேண்டும்.
அனைத்து மாநில அரசுகளும் அகவிலை நிவாரணம் தொடர்பான ஆணைகளை ரிசர்வ் வங்கிக்கு மின்னணு வடிவத்திலோ அல்லது எழுதப்பட்ட காகித வடிவத்திலோ அனுப்பி, வங்கியின் இணைய தளத்தில் வெளியிடப்பட வேண்டும்.

**3.** மத்திய அரசின் ஓய்வூதியதாரர்களுக்கு பொதுத்துறை வங்கிகள் மூலம் ஓய்வூதியம் வழங்கப்படும். ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலை நிவாரணம் அளிப்பதில் தாமதத்தைக் குறைத்திட அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் அகவிலை நிவாரணம் தொடர்பாக அரசாணைகளை ரிசர்வ் வங்கி மூலம் அனுப்புவதை கைவிடுவது.
**(Ref:DGBA.GAD.No.H.506/45.01.001/2002-03 2003, ஏப்ரல் 12 தேதியிட்டது)**

அகவிலை நிவாரண ஆணை வழங்கப்படுவதற்கும், பயனாளிகளுக்கு உண்மையில் தொகை சென்றடைவதற்கும் உள்ள கால இடைவெளியை குறைத்து, மூத்தகுடிமக்களுக்கு சேவை செய்திட பணியாளர், பொதுக் குறைகள் மற்றும் ஓய்வூதியங்கள் அமைச்சகம், ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியதாரர் நலன் துறை, இந்திய அரசு ஆகியவை கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

i. அகவிலை நிவாரணம் திருத்தப்பட்ட விலைகளில் நிதி அமைச்சகத்திடமிருந்து அனுமதியுடன் பெறப்பட்டவுடன், திருத்தி அமைக்கப்பட்ட விகிதத்தில் ஓய்வூதியத்தாரர்களுக்கு அகவிலை நிவாரணம் அளிப்பதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, அவைகள் உடனே முகைமை வங்கிகளின் தலைமைக்கு மின்னஞ்சல் மற்றும் நகல் அனுப்பி(Fax) மூலமாக தகுந்த உத்தரவுகளுடன் அகவிலை நிவாரணம் விரைந்து அளிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ii. பணியாளர் துறை அமைச்சகத்தின் பொதுமக்கள் குறை கேட்பு மற்றும் ஓய்வூதியங்கள் பிரிவில் உள்ள இணையதளத்தில் ஆணைகள் இடம் பெற்றுள்ளன.(http://www.persmin.nic.in )

iii. அனைத்து முகைமை வங்கிகளின் தலைமைகளுக்கும் ஆணைகளின் பிரதிகளை தபாலில் அனுப்பப்பட வேண்டும் மற்றும் இந்திய வங்கிகளின் சங்கம் முக்கிய செய்தித்தாள்களில் விளம்பரப்படுத்தப் படவேண்டும்.

**4. பொதுத்துறை வங்கிகள் மூலம் ஓய்வூதியம் வினியோகிக்கப்படுதல் – அகவிலை நிவாரணம் அளிக்கப்படுதல் (DR)(RBI/2006/296) (Ref: DGBA.GAD.No.H 11303/45.01.003/2005-06, 2006 பிப்ரவரி 6 தேதியிட்டது)**

ஓய்வூதியம் அளிக்கும் வங்கிகள் உடனடியாக அரசாங்க ஆணைகளின் பிரதிகளை பெற்று ஓய்வூதியம் வழங்கும் கிளைகளுக்கு அனுப்பி அவர்கள் தரப்பில் உடனடி நடவடிக்கை எடுக்கச் செய்தால் ஓய்வூதியதாரர்கள், அதற்கு அடுத்த மாதத்திலேயே ஓய்வூதியம் பெறும்போது அரசாங்கத்தின் சலுகைகளைப் பெறுவார்கள். முகமை வங்கிகளின் கட்டுப்பாட்டு அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகங்கள் தகுதியுள்ள ஓய்வூதியதாரர்கள் அரசாங்க ஓய்வூதியத்தை காலத்தோடும், சரியான முறையிலும் பெறுகிறார்களா என்பதை கண்காணிக்க வேண்டும். மேலும் மத்திய கட்டுமான மற்றும் இரயில்வே ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் அளிக்க வேண்டும். நியமன படிவங்கள் ‘A’ மற்றும் ‘B’ ஆகியவற்றின்படி பற்றுவரவு கைப்புத்தகத்தில் கண்டவாறு செய்து, பொதுத்துறை வங்கிகள் ஓய்வூதியம் வழங்குவதற்காக உள்ள நடைமுறைகளைக் கடைபிடித்து கிளைகள் மிக கவனமாக செயல்படவேண்டும். பணியாளர்களுக்கு ஓய்வூதிய திட்டங்கள்/விதிகள் இவை பற்றிய சரியான விழிப்புணர்வை ஏற்படுத்த, வங்கிகள் இதனை தங்களது பயிற்சி நிறுவனங்களின் பயிற்சித் திட்டங்களில் ஒரு பகுதியாக சேர்த்திடலாம்.

**5. படிவம் ‘A’ மற்றும் ‘B’ ஆகியவற்றில் நியமனத்தை ஒப்புக்கொள்ளுதல் – மத்திய பொது ஓய்வூதியம்**
**(Ref: DGBA.GAD.No.H 94/45.05.031/2004-05, 2004 ஆகஸ்ட் 24 தேதியிட்டது)**

ஓய்வூதியதாரர்கள் மற்றும் அவர்களது வாரிசுகளுக்கு அசௌகரியங்கள் ஏற்படாமல் இருக்க, ஓய்வூதியம் வழங்கும் அனைத்து வங்கிக்கிளைகளும், அந்தந்த நிலைக்குத் தகுந்தாற்போல் படிவம் ‘A’ அல்லது ‘B’ யில் நியமனங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஓய்வூதிய நிலுவைகளை தங்கள் வாரிசுகள் பெறவேண்டும் என்பதற்காக ஓய்வூதியதாரர்களால் இவை சமர்ப்பிக்கப்படுகின்றன.

**6. ரயில்வே ஓய்வூதாரர்கள் விஷயத்தில் ஓய்வூதிய நிலுவைத் தொகையை அளிப்பதற்கு நியமனங்களை (படிவம் 'A' மற்றும் 'B') ஒப்புக் கொள்ளுதல் (Ref: DGBA.GAD.No.H 3611/45.03.002/2005-06, 2005 அக்டோபர் 10 தேதியிட்டது)**

ஓய்வூதியதாரர்களுக்கு அசௌகரியத்தைக் குறைக்கும்வகையில் ரயில்வே அமைச்சகம் (ரயில்வே வாரியம்), மத்திய ஓய்வூதியம் கணக்கிடும் அலுவலகம் (CPAO) பரிந்துரைத்த நியமன படிவங்களை ('A' மற்றும் 'B') ரயில்வே ஓய்வூதியதாரர்களுக்கும் உபயோகப்படுத்தப்படும். வாரிசுதாரர்களுக்கு ஓய்வூதிய நிலுவைத் தொகையை அளிப்பதற்கு ரயில்வே ஓய்வூதியதாரர்கள் சமர்ப்பிக்கும் நியமன படிவங்கள் 'A' மற்றும் 'B' இவற்றை பெற்றுக்கொள்ளுமாறு, ஓய்வூதியம் வழங்கும் அனைத்து கிளைகளுக்கும் தேவையான உத்தரவுகளை முகைமை வங்கிகள் பிறப்பித்திட வேண்டும்.

**7. அகில இந்திய சேவை அதிகாரிகள், மத்திய அரசுப்பணியில் இருக்கும் நிலையில் ஓய்வு பெறும்பொழுது ஓய்வூதியம் மற்றும் இதர ஓய்வூதிய நன்மைகளை அளிப்பதை அமல்செய்யும் நடைமுறை**

**(Ref: DGBA.GAD.No.H 602-644/45.01.001/2004-05, 2004 அக்டோபர் 7 தேதியிட்டது)**

அகில இந்திய பணி அதிகாரிகள், மத்திய அரசுப்பணியில் இருக்கும் நிலையில் ஓய்வு பெறும்பொழுது ஓய்வூதியம் வழங்குவதற்கு முகைமை வங்கிகள் பின்பற்ற வேண்டிய கணக்கிடும் நடைமுறை:

**i.** பி.பி.ஓ(PPO) எண் அகில இந்திய சேவை ஓய்வூதியதாரர்களுக்காக 12 இலக்க எண் ஒன்றை மத்திய பொது ஓய்வூதியதாரருக்கு ஒதுக்கி, முன்னிடைச்சொல் ஓய்வூதியதாரரின் சேவை மற்றும் மாநில பற்றிய தகவலை தெரிவிக்கும். உதாரணத்திற்கு பஞ்சாபைச் சேர்ந்த IAS அதிகாரியின் பி.பி.ஓ. எண் – IAS/pb/438840400191

**ii.** அகில இந்திய பணி ஓய்வூதியதாரர் தங்களது ஓய்வூதியத்தை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் மூலம் மட்டுமே பெறலாம். அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளாவன, பொதுத்துறை வங்கிகள் மற்றும் நான்கு அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறைவங்கிகள் அவை ஐ.டி.பி.ஐ. வங்கி, யு.டி.ஐ.வங்கி, ஐசிஐசிஐ வங்கி மற்றும் எச்.டி.எஃப்.சி.வங்கி ஆகியவை ஆகும்

**(குறிப்பு: ஐடிபிஐ வங்கி லிட் பொதுத் துறை வங்கியாக வகைப்படுத்தப்பட்டது மற்றும் யுடிஐ வங்கி தற்பொழுது ஆக்ஸிஸ் வங்கி லிட். என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது)**

**iii.** சிறப்பு முத்திரை ஆணைக்குழு(SSA), CPAO ஆல் வெளியிடப்பட்டது நீல வண்ணத்தில், மத்திய பொது ஓய்வூதியதாரர்களிடமிருந்து வேறுபடும். இதுதவிர, ஆணைக்குழு மாநில அரசிடம் செலுத்தும் பணம் எதில் பற்று வைக்கப்பட வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டும்.

iv. சிறப்பு முத்திரை ஆணைக்குழுவின் ஒரு பிரதி, தலைமை பொது கணக்காளரிடம் விவரத்திற்காகவும் ஆவணப் பதிவிற்காகவும் அனுப்பப்படும்.

v. வங்கிகளின் பணம் அளிக்கும் கிளைகள், ஓய்வூதியதாரரை அடையாளம் காணுவதற்கு தேவையான நடைமுறைகளை பின்பற்றிய பிறகு, அகில இந்தியப்பணி ஓய்வூதியதாரர் பட்டியல் மாநில அரசுக்காக தயாரித்தளித்து, பணம் திருப்பித்தருதலுக்காக, பணம் திருப்பித்தரும் கிளைகள், ரிசர்வ் வங்கி/ஸ்டேட் வங்கி அந்தந்த விஷயத்திற்குத் தகுந்தாற்போல அனுப்பப்படும். அத்தகைய பட்டியல்கள் மூலம் மத்திய அரசின் பொது ஓய்வூதியதாரர்களுக்கு ஒற்றைச் சாளர முறையில் ஓய்வூதியம் தரப்படுவதில்லை. எனவே அவை சிபிஏஓ (CPAO) க்கு அனுப்பப் படுவதில்லை.

vi. திருப்பி அளிக்கும் கிளைகள் மாநில அரசு ஓய்வூதியதாரர்களுக்கான நடைமுறையைப் பின்பற்றி, ரிசர்வ் வங்கி, சி.ஏ.எஸ்.(CAS) நாக்பூருக்கு பரிந்துரை கடிதம் அனுப்பி, அதன் தொடர்புடைய பட்டியலை அதற்குரிய தலைமைப் பொதுக் கணக்காளரிடம் கொடுக்கப்படவேண்டும்.

vii. ரிசர்வ் வங்கி, சி.ஏ.எஸ்.(CAS) நாக்பூர் அதற்குரிய மாநில அரசின் கணக்கில் நடைமுறைக்கு ஏற்ப பற்று வைக்கும்.

**8. இராணுவ ஓய்வூதியதாரர்களுக்கு பொதுத்துறை வங்கிகள் மூலம் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் – ஓய்வூதியம் அளிக்கும் பட்டியல்களை சமர்ப்பிப்பதில் தாமதம் மற்றும் பொய்யான மற்றும் மோசடியான பணம் செலுத்துதல்களை தவிர்க்க நடவடிக்கைகள்**

**(Ref: DGBA.GAD.No.H 867-899/45.02.001/2004-05, 2004 அக்டோபர் 18 தேதியிட்டது)**

ஓய்வூதியம் வழங்கும் வங்கிகள், ஓய்வூதியம் அளிப்பதற்கான பட்டியலை, ஓய்வூதிய ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பதற்க்கு இரண்டு அல்லது மூன்று மாதங்கள் தாமதம் ஏற்படுகிறது. இது தொடர்பாக புத்தகத்தில் பத்தி 9(6), 10 மற்றும் 11 “இராணுவ ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம்” என்பதைப் பார்வையிடவும். பணம் அளிக்கும் கிளைகள் ஓய்வூதியம் அளிக்கும் பட்டியலை அனுப்புவது சம்பந்தமான நடைமுறைகள், இணைப்பு கிளைகள் மற்றும் திருப்பிக் கொடுக்கும் கிளைகள் ஆகியவை தெளிவாக வரையறுக்கப் பட்டுள்ளன. மொத்த நடைமுறைகளும் நிர்ணயிக்கப்பட்ட காலக் கெடுவிற்குள், ஓய்வூதிய பட்டியல்கள் இறுதியாக PCDA (ஓய்வூதியம்) அலஹாபாத் அலுவலகத்தில் தொடரும் மாதத்தின் 15ம் தேதிக்குள் பெறப்பட வேண்டும். மாரச் பட்டியல்கள் தவிர, ஏனெனில் இது ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 3வது வாரத்திற்குள் சென்றடையவேண்டும். PCDA (ஓய்வூதியம்) அலுவலகம் சில விஷயங்களில் கண்டுபிடித்துள்ளது. என்னவென்றால், பணிக்கொடை மற்றும் தொகுத்துப்பெறல் தொகைகளை போலியான மோசடிதாரர்களிடம் சில ஓய்வூதியம் அளிக்கும் கிளைகள் சரியாக விசாரிக்காமல் கொடுத்து விட்டன. ஓய்வூதியம் முதன்முறையாக அளிக்கப்படும்பொழுது பி.பி.ஓ(PPO) எண்கள் குறிப்பிடப்படுவது இல்லை அல்லது தவறான பி.பி.ஓ எண்கள் குறிப்பிடப்படுகின்றன என்றும் இதனால் பணம் வழங்குதல் முறையாக

நடைபெறுகிறதா என்பதனை சரிபார்க்க முடிவதில்லை என அறியப்படுகிறது. மேலும் இந்த பணம்செலுத்தல்கள் பிரதான ஓய்வூதிய செலுத்தும் பட்டியல்களில் காட்டப்பட்டன. இதோடு ராணுவ ஓய்வூதியதாரர்களின் மாதாந்திர பணம் வழங்குதலும் இடம் பெறுகிறது.

ஓய்வூதியம் வழங்கும் கிளைகள்/இணைப்பு கிளைகள்/திருப்பிக் கொடுக்கும் கிளைகள், கீழ்க்கண்டவற்றை உறுதிப்படுத்திட திறமையான அமைப்பை ஏற்படுத்திட அறிவுறுத்தப்படுகிறது.

i. ஓய்வூதியம் வழங்கும் கிளைகள், ஓய்வூதிய வழங்கு பட்டியல்களை இணைப்பு கிளைகளுக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் அனுப்ப வேண்டும் (தொடர்ந்து வரும் மாதத்தின் 10ஆம் தேதிக்குள்) பட்டியல்களை ஒன்றாக்குவதை செய்ய வேண்டாம்.

ii. இணைப்பு கிளைகள் பட்டியலின் மூலப்பிரதியோடு, தொகுப்பு தாள் மற்றும் தொகுப்பு ஆவணங்கள் ஆகியவைகளை வினியோகிக்கும் வங்கிகளுக்கு (ரிசர்வ் வங்கி/பாரத ஸ்டேட் வங்கி மற்றும் அந்தந்த இடத்திற்குத் தகுந்தாற்போல) ஒவ்வொரு மாதமும் 11 ஆம் தேதி போல் அனுப்ப வேண்டும்.

iii. திருப்பி அளிக்கும் வங்கிகள் பட்டியல்களின் மூலப்பிரதியோடு நேரடியாக சி.டி.ஏ. CDA (ஓய்வூதியம்), அலஹாபாத்திற்கு அனுப்ப வேண்டும். இது ஓய்வூதியம் திருப்பி அளிக்கும் வங்கி, அரசுக் கணக்கில் பற்று வைத்து பிசிடிஏ CDA (ஓய்வூதியம்) அந்தந்த மாதத்திற்கான 15ஆம் தேதிக்குள் மார்ச் பட்டியல்கள் தவிர அனுப்பப்பட வேண்டும்

iv. முதன்முதலாக ஓய்வூதியம் அளிக்கும் விஷயத்தில், ஓய்வூதியம் வழங்கும் கிளைகள் பட்டியல்களை கவனமாகத் தயாரித்து, அதில் பிபிஓ எண்ணை சரியாக குறிப்பிட்டு, ஒவ்வொரு ஓய்வூதியதாரருக்கு நேராக, அவருக்கான பணிக்கொடை மற்றும் அவருக்கான ஓய்வூதியத் தொகுப்பு ஆகியவைகளை சரியாக குறிப்பிட்டும் இவற்றைத் தனியாக மாதாந்திர அடிப்படையில் அனுப்பப்பட வேண்டும். இது ஏற்கனவே மாதாந்திர பணம் வழங்குதல் தனியாக தயாரிக்கப்பட்டு, தனியான தொகுப்புத்தாளில் வழங்கப்பட வேண்டும்.

v. ஓய்வூதியம் அளிக்கும் வங்கிகள் மாதாந்திர ஓய்வூதியம் வழங்கும் நடவடிக்கைகள் மற்றும் முதல் ஓய்வூதியம் வழங்கும் நடவடிக்கை ஆகியவற்றிற்கு தனித்தனியாக தொகுப்பு தாள்களில் தயாரிக்கப்பட வேண்டும்.

## 9. பொதுத்துறை வங்கிகளால் ரயில்வே ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் – மோசடியாக பணம் வழங்குதலைத் தடுத்திட நடவடிக்கைகள்

**(No.RB 1/2005/334) (Ref.DGBA.GAD.No.H.3389-3421/45.02.01/2004-05. 2005 ஜனவரி 6 தேதியிட்டது)**

நமக்கு கிடைத்த தகவலின்படி, இந்திய அரசின் ரயில்வே அமைச்சகத்தின் (ரயில்வே வாரியம்) கண்காணிப்புத்துறை சில மோசடி நடவடிக்கைகளைக் கண்டுபிடித்துள்ளது. இதில் ஓய்வூதியம்/ஓய்வூதிய நிலுவைகளை, அத்தாட்சியில்லாத நபர்களிடம்

பொதுத்துறை வங்கிகள் போலி ஓய்வூதிய கொடுப்பு ஆணைகளுக்கு (Pension Payment orders – PPO) எதிராக பணம் கொடுத்தது ஆகியவை அடங்கும். மேலும் அவர்கள் கூறுவது என்னவென்றால், முறையான சரிபார்ப்பு இன்றி ஓய்வூதியம் வழங்கும் கிளைகள் மோசடியாக பணம் வழங்கல்கள் அதாவது, முறையாக அங்கீகரிக்கப்பட்டவரால் கையெழுத்திட படாமல், கணக்கீட்டுத் தாளை மட்டுமே நம்பி, பணம் அளிப்பது மற்றும் விதிமுறைகளை பின்பற்றாமல் இருப்பது குறிப்பாக பி.பி.ஓ.க்களிடம் (PPO) பணம் பெற்றுக்கொண்டதற்கு ரசீது அளிக்காமல் இருப்பது ஆகியவை ஆகும்.

ரயில்வே அமைச்சகத்தின் (ரயில்வே வாரியம்) “பொதுத்துறை வங்கிகள் மூலம் ரயில்வே ஓய்வூதியம் வழங்கும் திட்டம்” குறிப்பிட்டுள்ள நடைமுறைகளை கண்டிப்பாக பின்பற்றி ரயில்வே ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கப்பட்டால் போலி ஓய்வூதிய அளிக்கும் ஆணைகளின் அடிப்படையில் மோசடியாக பணம் அளிப்பது தவிர்க்கப்படும்.

## 10. மத்திய பொது ஓய்வூதியம் அளித்தல் – ஓய்வூதியம் அளிக்கும் ஆணைகளின் பி.பி.ஓ.க்கள் (PPO) இரு பாதிகளிலும் அகவிலை நிவாரணம் பதிவு செய்தல்

**(Ref.DGBA.GAD.No.H.3452-3485/45.01.001/2004-05. 2005 ஜனவரி 11 தேதியிட்டது)**

ஓய்வூதிய அளிப்பு ஆணைகளின் இரு பாதிகளிலும் வேறுபாடுகள் இருக்கும்போது ஓய்வூதியம் அளிக்கும் கிளைகள் அடிப்படை ஓய்வூதியம்/ குடும்ப ஓய்வூதியம் ஆகியவற்றின் தொகைகளை புதுப்பிக்க தவறுவது நம்முடைய கவனத்திற்கு வந்துள்ளது.

இது தொடர்பாக “மத்திய அரசின் பொது ஓய்வூதியதாரர்களுக்கு, பொதுத் துறை வங்கிகளால் ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின்” பத்திகள் 12-17 மற்றும் 19-1 ஆகியவற்றைக் கீழே கொடுத்துள்ளோம்:

“ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியத்திற்கான அகவிலை நிவாரணங்களில் மாற்றம் ஏற்படும்பொழுது, அளிக்கும் வங்கி, ஓய்வூதியதாரரின் மறுபாதி பி.பி.ஓ.வை பெற்று, அவற்றில் மாற்றங்களை பதிவு செய்து, அதில் எந்த தேதியிலிருந்து அந்த மாற்றங்கள் அமல்படுத்தப்படுகின்றன என்பதையும் குறிப்பிடவேண்டும். இதைச் செய்த பிறகு இரண்டு பாதிகளும் ஓய்வூதியதாரர்களுக்கு திருப்பிக் கொடுக்கப்படும்” (பத்தி 12-17 )

எப்போதெல்லாம் கூடுதல் நிவாரணம் ஓய்வூதியங்கள் மேல் அரசாங்கத்தால் வழங்கப்படுகிறதோ, அது தொடர்பான தகவலை பணியாளர் நல அமைச்சகம், பொது குறைகள் மற்றும் ஓய்வூதியங்கள் (ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியதாரர் நலன் துறை) அனுப்பி வைக்கும். இதனை அதற்கென நியமிக்கப்பட்ட பொதுத்துறையின் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியிடம் அவர்கள் கொடுக்கும் முகவரியில் (பெயருடன்) கொடுக்கப் படவேண்டும். இதன்பிறகு இது வங்கிகளின் பொறுப்பாகி, அவை தங்களது பிரதிநிதிகள் மூலம் தேவையான பிரதிகளை (முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும்) பணியாளர் அமைச்சகம், பொதுகுறைகள் மற்றும் ஓய்வூதியங்கள் (ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியதாரர் நல்வாழ்வு) பிரிவிலிருந்து பெற்று, உடனடியாக அவைகளை பத்து நாட்களுக்குள், அமலாக்கப்படுவதற்காக பணம் வழங்கும் கிளைகளுக்கு அனுப்ப வேண்டும். ஒவ்வொரு பணம் வழங்கும் கிளையும்,

மத்திய அரசின் பொது ஓய்வூதியதாரர்களின் திருத்தப்பட்ட ஓய்வூதியத்தை விவரங்களைப் பெற்று முறையாகத் தீர்மானிக்கும். தனிப்பட்ட ஓய்வூதியதாரர்களின் விகிதங்களின் கணக்கிடல் இணைப்பு XXII ( பக்கம் 41)ல் உள்ளது மற்றும் அவை பி.பி.ஓக்களின் வினியோகிப்பவரின் பகுதியில் குறிப்பிடப்பட்டு எந்த தேதியிலிருந்து நிவாரணம் அளிக்கப்படுகிறது என்பதையும் தெளிவாக்கி பொறுப்பிலுள்ள கிளை மேலாளரின் அத்தாட்சியுடன் பணம் அளிப்பதற்கு முன் திருத்தப்பட்ட விகிதங்களில் நிவாரணம் மற்றும் நிலுவைத் தொகை ஏதேனும் ஓய்வூதியதாரர்களுக்கு இந்தக் கணக்கில் இருந்தால் ....... (பத்தி 19-1) வங்கிகள் ஓய்வூதியம் அளிக்கும் தங்களது கிளைகளுக்கு மேற்கண்ட விதிகளை கவனத்திற்கு கொண்டு வந்து, அவற்றை உறுதியாக பின்பற்றுமாறு உத்தரவுகள் பிறப்பிக்கவேண்டும்.

**11. ரயில்வே ஓய்வூதியத்தை முகமை வங்கிகள் மூலம் வினியோகிப்பது – வங்கிகள் அளவிற்குமேல் பணம் அளித்துவிடக்கூடிய சில முக்கிய பகுதிகள்**
**(Ref.DGBA.GAD.No.6073/45.05.031/2004-05. 2005 மே 30 தேதியிட்டது)**

ரயில்வே ஓய்வூதியதாரர்கள் விஷயத்தில், வங்கிகள், அளவிற்குமேல் பணம் அளித்துவிடக்கூடிய முக்கிய பகுதிகளின் பட்டியலை மும்பையிலுள்ள மத்திய ரயில்வேயின் நிதியியல் ஆலோசகர் மற்றும் தலைமை கணக்கு அதிகாரியின் அலுவலகத்திலிருந்து பெற்று, அனைத்து முகைமை வங்கிகளுக்கும் அனுப்பி வைத்து, அதனை ஓய்வூதியம் வழங்கும் கிளைகளுக்கு சுற்றுக்கு அனுப்பி, ரயில்வே ஓய்வூதியத்தில் அளவுக்கு அதிகமாக கொடுப்பதை தடுத்திட பொருத்தமான நடவடிக்கையை எடுக்க உத்தரவிட வேண்டும்.

**12. பொதுத்துறை வங்கிகள் மூலம் ரயில்வே ஓய்வூதியத்தாரர்களுக்கு, ஓய்வூதியம் வழங்கும் திட்டம் – இரயில்வே அமைச்சகத்தின் மூலம் ஏழு புதிய மண்டலங்களுக்கு நிதியியல் ஆலோசகர் மற்றும் தலைமை கணக்கு அலுவலர்களை (Financial Adviser & Chief Accounting Officers- FA &CAOs) (Ref.DGBA.GAD.No.H.10746/45.03.001/2005-06. 2006 ஜனவரி 24 தேதியிட்டது)**

ரயில்வே அமைச்சகம், தலைமை கணக்கு அலுவலர்கள் மற்றும் நிதியியல் ஆலோசகர்களை ஏழு புதிய மண்டலங்களுக்கு (அதாவது வடமேற்கு ரயில்வே, ஜெய்பூர்; கிழக்கு மத்திய ரயில்வே, ஹாஜிபூர்; கிழக்கு கடற்ரை ரயில்வே, புவனேஸ்வர்; வடக்கு மத்திய ரயில்வே அலஹாபாத்; தென்கிழக்கு மத்திய ரயில்வே, பிலாஸ்பூர்; தென்மேற்கு ரயில்வே, ஹூப்லி; மேற்கு மத்திய ரயில்வே, ஜபல்பூர்) ஓய்வூதியத்தை ஓத்துக் கொள்வது/ஓய்வூதியம் வழங்கலில் பற்றுகள் ஆகியவற்றை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் மூலம் ஓய்வூதியம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

**13. அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் மூலம் ஓய்வூதியம் வழங்குதல் – ஓய்வூதியதாரரின் வாழ்க்கைத் துணைவரோடு இணைந்து செயல்படுத்தப்படும் இணைந்த கணக்கில் ஓய்வூதியத்தை வரவு வைத்தல்**
**(Ref.DGBA.GAD.No.12736/45.03.001/2005-06. 2006 பிப்ரவரி 24 தேதியிட்டது)**

மத்திய ஓய்வூதியம் கணக்கிடும் அலுவலகம் (Central Pension Accounting Office – CPAO) வாழ்க்கைத் துணைவருடன் இணைந்த கணக்கிற்கு ஓய்வூதியத் தொகையை வரவு வைப்பதைப் பற்றிய உத்தரவுகளைப் பிறப்பிக்கிறது. இதற்கான அங்கீகாரம்,

ஓய்வூதியம் வழங்கும் ஆணையில் (Pension Payment Order – PPO) மத்திய பொது ஓய்வூதியதாரர்கள் விஷயத்தில் உள்ளதுபோலவே ரயில்வே ஓய்வூதியதாரர்களுக்கும் பொருந்தும் என இரயில்வே அமைச்சகம் (இரயில்வே வாரியம்) சுற்றறிக்கை எண். RBA-63/2005(2005/ACII 21/19 2005 அக்டோபர் 13 தேதியிட்டது. ஓய்வூதியதாரரின் துணைவருடனான கணக்கை, மேலே குறிப்பிடப்பட்ட இரயில்வே அமைச்சகத்தின் 2005 அக்டோபர் 13 தேதியிட்ட சுற்றறிக்கையில் சொல்லப்பட்ட சில விதிகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் வாழ்க்கைத் துணைவருடன் ஓய்வூதியதாரர் சேர்ந்துள்ள இணைந்த ஓய்வூதியக் கணக்கு “முன்னவர் அல்லது உயிரோடிருப்பவர்” அல்லது இருவரில் ஒருவர் அல்லது உயிரோடிருப்பவர்” என்ற அடிப்படையில் செயல்படுத்தப்படும்.

## 14. அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் மூலம் ஓய்வூதியம் வழங்குதல் – ஓய்வூதியதாரரின் வாழ்க்கைத் துணைவரோடு சேர்ந்து ஓய்வூதியத்தை வரவு வைத்தல் (Ref.DGBA.GAD.No.H-2134/45.02.001/2006-07. 2006 ஆகஸ்ட் 4 தேதியிட்டது)

இராணுவ அமைச்சகம் மற்றும் இராணுவ கணக்குகளின் தலைமை கட்டுப்பாட்டாளர் ஆகியோர் ஓய்வூதியத்திட்டத்தை திருத்தி ஓய்வூதியதாரர் மற்றும் அவரது துணைவரின், இணைந்த கணக்கில் அதாவது யாருடைய பெயரில், ஓய்வூதியம் வழங்கும் (PPO) ஆணை உள்ளதோ அதில் ஓய்வூதியம் வரவு வைக்க அனுமதி அளித்துள்ளனர். ஓய்வூதியதாரரின் வாழ்க்கைத் துணைவருடன் இணைந்த கணக்கை “முதலாமவர் அல்லது உயிரோடிருப்பவர்” அல்லது இருவரும் அல்லது உயிரோடிருப்பவர்” அடிப்படையில் கீழே கண்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில்

**a)** ஓய்வூதியதாரரின் வங்கிக் கணக்கில் ஓய்வூதியம் வரவு வைக்கப்பட்ட பிறகு, அரசு/வங்கி இவற்றின் பொறுப்பு நின்றுவிடுகிறது. வாழ்க்கைத் துணைவர் தவறுதலாக பணத்தை பெற்றால்கூட மேற்கொண்டு பொறுப்பு எதுவும் இல்லை.

**b)** ஒரு ஓய்வூதியதாரரின் வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியம் வழங்கப் படுவதால், ஒரு ஓய்வூதியதாரரின் மரணம் அவர் இறந்த ஒரு மாதத்திற்குள் தெரிவிக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் இறந்தவரின் வாழ்க்கைத் துணைவருடன் சேர்ந்த இணைந்த கணக்கிற்கு மாதாந்திர ஓய்வூதியத்தை ஓய்வூதியதாரரின் மரணத்திற்குபிறகு அனுப்புவது நிறுத்தப்படும். எனினும் ஏதேனும் ஒரு தொகை இணைந்த கணக்கில் தவறுதலாக வரவு வைக்கப்பட்டால், அத்தொகை ஓய்வூதியதாரரின் இணைந்த கணக்கிலிருந்து அல்லது தனிப்பட்ட கணக்கிலிருந்து திரும்பப்பெறப்படும். சட்டப்பூர்வமான வாரிசுதாரர்கள், பின் வருவோர் எழுதிக் கொடுக்கும் அதிகாரம் பெற்றோர் ஆகியோரும் இணைந்த கணக்கில் தவறுதலாக வரவு வைக்கப்பட்ட பணத்தை திருப்பிக் கொடுக்கவேண்டிய பொறுப்பிலுள்ளார்கள்

**c)** ஓய்வூதியதாரரின் வாழ்க்கைத் துணைவருடன் இணைந்த கணக்கிற்கு ஓய்வூதிய நிலுவைகளை (வாரிசுரிமம்) வழங்கும் விதிகள் 1983 தொடர்ந்து பொருந்தும். இது உணர்த்துவது என்னவென்றால் விதிகள் 5 மற்றும் 6இன்பதி ஒப்புக்கொள்ளப்பட்ட வாரிசுரிமம் இருக்குமேயானால் விதிகளின்படி நிலுவைகள், வாரிசுதாரருக்கு அளிக்கப்படலாம்.

ஏற்கனவே உள்ள ஓய்வூதியதாரர்கள், இணைப்பு கணக்கில் தங்களது ஓய்வூதியம் வரவு வைக்கப்பட வேண்டுமென்று விரும்பினால் மேலே குறிப்பிட்டவாறு, ஒரு விண்ணப்பத்தை, தற்போது ஓய்வூதியம் பெற்றுக் கொண்டிருக்கும் வங்கியின் கிளையில் முறைப்படி சமர்ப்பிக்கவேண்டும். இக்கடிதத்தில் உள்ள விதிகளையும், நிபந்தனைகளையும் துணைவரின் கையெழுத்தும் இடம்பெறும். இக்கடித வெளியீட்டிற்கு பிறகு ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கும் இந்த விதிகள் பொருந்தும்.

**15. மேற்கு வங்க அரசு ஓய்வூதியதாரர்களுக்கு பொதுத்துறை வங்கிகள்மூலம் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் (பகுதி A) – ஓய்வூதியதாரரின் வாழ்க்கைத் துணைவரோடு இணைந்து செயல்படுத்தப்படும் இணைந்த வங்கிக்கணக்கில் ஓய்வூதியத்தை வரவு வைத்தல்**
**(Ref.DGBA.GAD.No.6926/45.05.005/2006-07. 2006 அக்டோபர் 30 தேதியிட்டது)**

மேற்கு வங்க அரசு, ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை திருத்தி, ஓய்வூதியதாரரின் வாழ்க்கைத் துணைவருடன் சேர்ந்தியக்கும் இணைந்த கணக்கில் ஓய்வூதியத்தை வரவு வைக்க வகை செய்யப்பட்டது. வாழ்க்கைத் துணைவருடன் சேர்ந்த ஓய்வூதியதாரரின் இணைப்பு கணக்கு 'முதலாமவர் அல்லது உயிரோடிருப்பவர்' அல்லது 'இருவரில் ஒருவர் அல்லது உயிரோடிருப்பவர்' என்ற அடிப்படையில் கீழ்க்கண்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும்.

**a.** ஓய்வூதியதாரரின் வங்கிக் கணக்கில் ஓய்வூதியம் வரவு வைக்கப்பட்டபிறகு, அரசு/வங்கி இவற்றின் பொறுப்பு நின்று விடுகிறது. வாழ்க்கைத் துணைவர் தவறுதலாக பணத்தை பெற்றால்கூட மேற்கொண்டு பொறுப்பு எதுவும் இல்லை.

**b.** ஒரு ஓய்வூதியதாரரின் வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியம் வழங்கப் படுவதால், ஒரு ஓய்வூதியதாரரின் மரணம் அவர் இறந்த ஒரு மாதத்திற்குள் தெரிவிக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் இறந்தவரின் வாழ்க்கைத் துணைவருடன் சேர்ந்த இணைந்த கணக்கிற்கு மாதாந்திர ஓய்வூதியத்தை ஓய்வூதியதாரரின் மரணத்திற்குபிறகு அனுப்புவது நிறுத்தப்படும். எனினும் ஏதேனும் ஒரு தொகை இணைந்த கணக்கில் தவறுதலாக வரவு வைக்கப்பட்டால், அத்தொகை ஓய்வூதியதாரரின் இணைந்த கணக்கிலிருந்து அல்லது தனிப்பட்ட கணக்கிலிருந்து திரும்பப்பெறப்படும். சட்டப்பூர்வமான வாரிசுதாரர்கள், பின் வருவோர் எழுதிக் கொடுக்கும் அதிகாரம் பெற்றோர் ஆகியோரும் இணைந்த கணக்கில் தவறுதலாக வரவு வைக்கப்பட்ட பணத்தை திருப்பிக் கொடுக்கவேண்டிய பொறுப்பிலுள்ளார்கள்.

**c.** ஓய்வூதியதாரரின் வாழ்க்கைத் துணைவருடன் இணைந்த கணக்கிற்கு ஓய்வூதிய நிலுவைகளை (வாரிசுரிமம்) வழங்கும் விதிகள் 1983 தொடர்ந்து பொருந்தும். இது உணர்த்துவது என்னவென்றால் விதிகள் 5 மற்றும் 6இன்பதி ஒப்புக்கொள்ளப்பட்ட வாரிசுரிமம் இருக்குமேயானால் விதிகளின்படி நிலுவைகள், வாரிசுதாரருக்கு அளிக்கப்படலாம்.

ஏற்கனவே உள்ள ஓய்வூதியதாரர்கள், இணைப்பு கணக்கில் தங்களது ஓய்வூதியம் வரவு வைக்கப்பட வேண்டுமென்று விரும்பினால் மேலே குறிப்பிட்டவாறு, ஒரு விண்ணபத்தை, தற்போது ஓய்வூதியம் பெற்றுக் கொண்டிருக்கும் வங்கியின் கிளையில் முறைப்படி சமர்ப்பிக்கவேண்டும். இக்கடிதத்தில் உள்ள விதிகளையும், நிபந்தனைகளையும் துணைவரின் கையெழுத்தும் இடம்பெறும். இக்கடித வெளியீட்டிற்கு பிறகு ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கும் இந்த விதிகள் பொருந்தும்.

**16. பொதுத்துறை வங்கிகள்மூலம் பஞ்சாப் அரசின் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம்**
**(Ref.DGBA.GAD.No.H.8973/45.05.003/2006-07. 2006 நவம்பர் 24 தேதியிட்டது)**

பஞ்சாப் அரசு, ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை திருத்தி, ஓய்வூதியதாரரின் வாழ்க்கைத் துணைவருடன் சேர்ந்தியக்கும் இணைந்த கணக்கில் ஓய்வூதியத்தை வரவு வைக்க வகை செய்யப்பட்டது. வாழ்க்கைத் துணைவருடன் சேர்ந்த ஓய்வூதியதாரரின் இணைப்பு கணக்கு ‘முதலாமவர் அல்லது உயிரோடிருப்பவர்’ அல்லது ‘இருவரில் ஒருவர் அல்லது உயிரோடிருப்பவர்’ என்ற அடிப்படையில் கீழ்க்கண்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும்.

**a.** ஓய்வூதியதாரரின் வங்கிக் கணக்கில் ஓய்வூதியம் வரவு வைக்கப்பட்டபிறகு, அரசு/வங்கி இவற்றின் பொறுப்பு நின்று விடுகிறது. வாழ்க்கைத் துணைவர் தவறுதலாக பணத்தை பெற்றால்கூட மேற்கொண்டு பொறுப்பு எதுவும் இல்லை.

**b.** ஒரு ஓய்வூதியதாரரின் வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியம் வழங்கப் படுவதால், ஒரு ஓய்வூதியதாரரின் மரணம் அவர் இறந்த ஒரு மாதத்திற்குள் தெரிவிக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் இறந்தவரின் வாழ்க்கைத் துணைவருடன் சேர்ந்த இணைந்த கணக்கிற்கு மாதாந்திர ஓய்வூதியத்தை ஓய்வூதியதாரரின் மரணத்திற்குபிறகு அனுப்புவது நிறுத்தப்படும். எனினும் ஏதேனும் ஒரு தொகை இணைந்த கணக்கில் தவறுதலாக வரவு வைக்கப்பட்டால், அத்தொகை ஓய்வூதியதாரரின் இணைந்த கணக்கிலிருந்து அல்லது தனிப்பட்ட கணக்கிலிருந்து திரும்பப்பெறப்படும். சட்டப்பூர்வமான வாரிசுதாரர்கள், பின் வருவோர் எழுதிக் கொடுக்கும் அதிகாரம் பெற்றோர் ஆகியோரும் இணைந்த கணக்கில் தவறுதலாக வரவு வைக்கப்பட்ட பணத்தை திருப்பிக் கொடுக்கவேண்டிய பொறுப்பிலுள்ளார்கள்.

**c.** ஓய்வூதிய நிலுவைத் தொகைகளை வழங்குதலில் வாரிசுதாரர் நியமனம் பற்றிய முன்னேற்பாடுகளை, பஞ்சாப் நிதியியல் விதிகள் தொகுதி I விதிகள் 5.36யின்கீழ் குறிப்பு 4ன் ஓய்வூதியங்களுக்கான முன்னேற்பாடுகளோடு ஒத்த நிலையில், அவ்வப்போது பிறப்பிக்கப்படும் உத்தரவுகள், ஓய்வூதியதாரரின் வாழ்க்கைத் துணைவரோடு இணைந்த வங்கிக் கணக்கிற்கு பொருந்தும். இந்த விதிகளின்படி, ஒப்புக்கொள்ளப்பட்ட வாரிசு நியமனம் இருக்குமேயானால், விதிகளின்படி உள்ள நிலுவைத் தொகையை வாரிசுதாரருக்கு அளித்திடல் வேண்டும். நிதித்துறை, பஞ்சாப் சுற்றறிக்கை கடித எண் 21(1)83-

FR(6)11991, 1984 ம் ஆண்டு நவம்பர் 20 தேதியிட்டதில், திருத்தப்பட்ட வாரிசுரிமை படிவங்கள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே உள்ள ஓய்வூதியதாரர்கள், இணைப்பு கணக்கில் தங்களது ஓய்வூதியம் வரவு வைக்கப்பட வேண்டுமென்று விரும்பினால் மேலே குறிப்பிட்டவாறு, ஒரு விண்ணப்பத்தை, தற்போது ஓய்வூதியம் பெற்றுக் கொண்டிருக்கும் வங்கியின் கிளையில் முறைப்படி சமர்ப்பிக்கவேண்டும். இக்கடிதத்தில் உள்ள விதிகளையும், நிபந்தனைகளையும் துணைவரின் கையெழுத்தும் இடம்பெறும். இக்கடித வெளியீட்டிற்கு பிறகு ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கும் இந்த விதிகள் பொருந்தும்.

**17. இராணுவ ஓய்வூதிய வழங்கலை அளிப்பதற்கு ஒற்றைச் சாளர முறையை அறிமுகப்படுத்துதல்**
**(Ref.DGBA.GAD.No.H-13834/45.02.001/2006-07. 2006 மார்ச் 13 தேதியிட்டது)**

இராணுவக் கணக்குகளின் முதன்மை கட்டுப்பாட்டு அலுவலரின் ஓய்வூதியம்) ஆலோசனையோடு 2007 ஏப்ரல் 1ஆம் தேதியிலிருந்து இராணுவ ஓய்வூதியத்திற்கு ஒற்றைச் சாளர முறை அறிமுகப்படுத்தப்பட்டது. எனவே வழங்கும் வங்கிகளான அதாவது ரிசர்வ் வங்கி (பொதுக்கணக்குத்துறை), பாரதீய ஸ்டேட் வங்கி மற்றும் அதன் கூட்டாளி வங்கிகள், இராணுவ ஓய்வூதியம் வழங்குதலை, 2007 ஏப்ரல் 1ம் தேதியிலிருந்து நிறுத்திக்கொள்ளும் ஓய்வூதியம் வழங்கல் பரிவர்த்தனைகளை ரிசர்வ் வங்கியின் நாக்பூர் அலுவலகத்தில் உள்ள மத்திய கணக்குப்பிரிவின் இணைப்பு அமைப்பின் மூலம் மத்திய பொது ஓய்வூதிய விஷயத்திற்கு நிதித்தீர்வு செய்யப்படும். முகைமை வங்கிகள் வழங்கல் பட்டியல்களை நேரடியாக திரு.B.D.திவாரி, SAO(P), PCDA(P) அலுவலகம், திரௌபதி காட், அலகாபாத் என்ற முகவரிக்கு அனுப்பிட வேண்டும்.
2007 ஏப்ரல் 1க்கு முந்திய, ஓய்வூதிய வழங்கல் பட்டியல்களின் தகவல்கள் தேவைப்படும் நிலுவையில் உள்ள அனைத்து கடந்தகால பரிவர்த்தனைகளும், ரிசர்வ் வங்கி/பாரதிய ஸ்டேட் வங்கி மற்றும் அதன் கூட்டாளி வங்கிகள் இவைகளின் கிளைகள் மூலம் தீர்த்து வைக்கப்படும்.

**18. அருணாசலப் பிரதேஷ் அரசின் ஓய்வூதியதாரர்களுக்கு பொதுத்துறை வங்கிகள்மூலம் ஓய்வூதியம் வழங்கும் திட்டம்**
**(Ref.DGBA.GAD.No.H.14279/45.05.024/2006-07. 2006 மார்ச் 23 தேதியிட்டது)**

அருணாசலப் பிரதேச அரசு, ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை திருத்தி, ஓய்வூதியதாரரின் வாழ்க்கைத் துணைவருடன் சேர்ந்தியக்கும் இணைந்த கணக்கில் ஓய்வூதியத்தை வரவு வைக்க வகை செய்யப்பட்டது. வாழ்க்கைத் துணைவருடன் சேர்ந்த ஓய்வூதியதாரரின் இணைப்பு கணக்கு ‘முதலாமவர் அல்லது உயிரோடிருப்பவர்’ அல்லது ‘இருவரில் ஒருவர் அல்லது உயிரோடிருப்பவர்’ என்ற அடிப்படையில் கீழ்க்கண்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும்.

**a.** ஓய்வூதியதாரரின் வங்கிக் கணக்கில் ஓய்வூதியம் வரவு வைக்கப்பட்டபிறகு, அரசு/வங்கி இவற்றின் பொறுப்பு நின்று விடுகிறது. வாழ்க்கைத் துணைவர் தவறுதலாக பணத்தை பெற்றால்கூட மேற்கொண்டு பொறுப்பு எதுவும் இல்லை.

**b.** ஒரு ஓய்வூதியதாரரின் வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியம் வழங்கப் படுவதால், ஒரு ஓய்வூதியதாரரின் மரணம் அவர் இறந்த ஒரு மாதத்திற்குள் தெரிவிக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் இறந்தவரின் வாழ்க்கைத் துணைவருடன் சேர்ந்த இணைந்த கணக்கிற்கு மாதாந்திர ஓய்வூதியத்தை ஓய்வூதியதாரரின் மரணத்திற்குபிறகு அனுப்புவது நிறுத்தப்படும். எனினும் ஏதேனும் ஒரு தொகை இணைந்த கணக்கில் தவறுதலாக வரவு வைக்கப்பட்டால், அத்தொகை ஓய்வூதியதாரரின் இணைந்த கணக்கிலிருந்து அல்லது தனிப்பட்ட கணக்கிலிருந்து திரும்பப்பெறப்படும். சட்டப்பூர்வமான வாரிசுதாரர்கள், பின் வருவோர் எழுதிக் கொடுக்கும் அதிகாரம் பெற்றோர் ஆகியோரும் இணைந்த கணக்கில் தவறுதலாக வரவு வைக்கப்பட்ட பணத்தை திருப்பிக் கொடுக்கவேண்டிய பொறுப்பிலுள்ளார்கள்.

**c.** ஏற்கனவே உள்ள ஓய்வூதியதாரர்கள், இணைப்பு கணக்கில் தங்களது ஓய்வூதியம் வரவு வைக்கப்பட வேண்டுமென்று விரும்பினால் மேலே குறிப்பிட்டவாறு, ஒரு விண்ணப்பத்தை, தற்போது ஓய்வூதியம் பெற்றுக் கொண்டிருக்கும் வங்கியின் கிளையில் முறைப்படி சமர்ப்பிக்கவேண்டும். இக்கடிதத்தில் உள்ள விதிகளையும், நிபந்தனைகளையும் துணைவரின் கையெழுத்தும் இடம்பெறும். இக்கடித வெளியீட்டிற்கு பிறகு ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கும் இந்த விதிகள் பொருந்தும்.

**d.** பிபிஓ.வில்(PPO) அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைத் துணைவர் அல்லாத வேறு எந்த நபரோடும் இணைந்த கணக்கைத் தொடங்கினால் அதில் குடும்ப ஓய்வூதியம் வரவு வைக்கப்படாது. குடும்ப ஓய்வூதியதாரர்கள் இந்த புதிய திருத்தப்பட்ட திட்டத்தின்கீழ் வருவதில்லை

## 19. பொதுத்துறை வங்கிகள் மூலம் மத்திய அரசு ஓய்வூதியத்தை வினியோகித்தல் – ஓய்வூதியச் சீட்டை அளித்தல்

**(Ref.DGBA.GAD.No.H.10975/45.05.031/2006-07. 2007 ஜனவரி 9 தேதியிட்டது)**

மத்திய அரசின் நிதியமைச்சகத்தின், மத்திய ஓய்வூதிய கணக்கிடும் அலுவலகத்தின் ஆலோசனையுடன், மத்திய அரசின் ஓய்வூதியதாரர்களுக்கு(பொது), ஓய்வூதியசீட்டுகளை ஓய்வூதியம் தொடங்கும்போதும், ஓய்வூதிய அளவில் மாற்றம் ஏற்பட்டாலும் அளிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

அனைத்து முகைமை வங்கிகளும் தங்களது ஓய்வூதியம் வழங்கும் கிளைகளுக்கு இது சம்பந்தமாக தகுந்த உத்தரவுகள் பிறப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

## 20. பொதுத்துறை வங்கிகள் மூலம் மத்திய அரசு ஓய்வூதியத்தை வினியோகித்தல் – இராணுவ ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியச் சீட்டை அளித்தல்

**(Ref.DGBA.GAD.No.H.17663/45.05.031/2006-07. 2007 ஜூன் 12 தேதியிட்டது)**

இராணுவ அமைச்சகம், முன்னாள் இராணுவ வீரர் நலத்துறை, தலைமை இராணுவ கணக்கு கட்டுப்பாட்டு அதிகாரியின் அலுவலகம் இவற்றின் ஆலோசனையோடு, ஆயுதப்படைகளின் போர்வீரர்கள்/ இராணுவ பொது ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்களையும் உள்ளடக்கிய இவர்களுக்கு இப்பொழுதுள்ள முறைமையில் மத்திய அரசின் ஓய்வூதியதாரர்களுக்கு (பொது)

உள்ள அனைத்தும் பொருந்தும். அனைத்து முகைமை வங்கிகளும் தங்களது ஓய்வூதியம் வழங்கும் கிளைகளுக்கு இது சம்பந்தமாக தகுந்த உத்தரவுகள் பிறப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

**21.** பொதுத்துறை வங்கிகள் மூலம் மத்திய அரசு ஓய்வூதியத்தை வினியோகித்தல் – ரயில்வே ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியசீட்டுகளை வழங்குதல்
**(Ref.DGBA.GAD.No.H.3856/45.05.031/2007-08. 2007 அக்டோபர் 8 தேதியிட்டது)**

ரயில்வே அமைச்சகம், ரயில்வே வாரியம், ரயில்வே ஓய்வூதியதாரர்களுக்கு குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு ஏற்கனவே உள்ள முறையில், மத்திய அரசு ஓய்வூதியதாரர்களுக்கு(பொது) பொருந்தும் வகையில் ஓய்வூதியம் வழங்க தீர்மானித்துள்ளது. எனவே ஓய்வூதிய சீட்டுகள், அதற்கென்று பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் ரயில்வே ஓய்வூதியதாரர்கள்/குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் தொடங்கும்பொழுதும், அதன்பின் எப்பொழுதெல்லாம் ஓய்வூதிய அளவில் மாற்றம் வருகிறதோ அதற்கேற்ப சீட்டுக்களை பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் வழங்கிட வேண்டும். அனைத்து முகைமை வங்கிகளும் தங்களது ஓய்வூதியம் அளிக்கும் கிளைகளுக்கு தகுந்த உத்தரவுகளைப் பிறப்பிக்குமாறு அறிவுறுத்தப் படுகிறது.

**22.** பொதுத்துறை வங்கிகளால் அஸ்ஸாம் அரசு ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் – தனது கணவன்/மனைவியுடன் ஓய்வூதியதாரர் இணைந்த கணக்காக செயல்படுத்தப்படுவதில் வரவு வைப்பது.
**(Ref.DGBA.GAD.No.7570/45.05.018/2007-08, 2008 ஜனவரி 15 தேதியிட்டது மற்றும் இதனுடன் அஸ்ஸாம் அரசின் No.PPG(P)92/2006/18, டிசம்பர் 12, 2007தேதியிட்ட அலுவலக குறிப்பாணை இணைக்கப்பட்டுள்ளது)**

அஸ்ஸாம் மாநில அரசு ஓய்வூதியம் அளிக்கும் திட்டத்தை திருத்தியமைத்து ஓய்வூதியம் அளிப்பதை ஓய்வூதியதாரர் மற்றும் அவரது வாழ்க்கைத்துணை ஆகியோர் இணைந்த கூட்டு சேமிப்பு/நடப்பு வங்கிக் கணக்கிற்கு ஓய்வூதியத்தை வரவு வைக்க அனுமதித்தும் குடும்ப ஓய்வூதியத்தில் ஓய்வூதிய கொடுப்பு ஆணை உள்ளது. கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வாழ்க்கைத்துணையுடன் இணைந்த ஓய்வூதியதாரரின் கணக்கு "முன்னவர் அல்லது உயிரோடிருப்பவர்" அல்லது "உயிரோடிருக்கும் இருவரில் ஒருவர்" என்ற முறையில் செயல்படுத்தப் படலாம்.

**a.** ஓய்வூதியதாரரின் வங்கிக் கணக்கில் ஓய்வூதியம் வரவு வைக்கப்பட்டபிறகு, அரசு/வங்கி இவற்றின் பொறுப்பு நின்று விடுகிறது. வாழ்க்கைத் துணைவர் தவறுதலாக பணத்தை பெற்றால்கூட மேற்கொண்டு பொறுப்பு எதுவும் இல்லை.

**b.** ஒரு ஓய்வூதியதாரரின் வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியம் வழங்கப் படுவதால், ஒரு ஓய்வூதியதாரரின் மரணம் அவர் இறந்த ஒரு மாதத்திற்குள் தெரிவிக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் இறந்தவரின் வாழ்க்கைத் துணைவருடன் சேர்ந்த இணைந்த கணக்கிற்கு மாதாந்திர ஓய்வூதியத்தை ஓய்வூதியதாரரின் மரணத்திற்குபிறகு அனுப்புவது நிறுத்தப்படும். எனினும் ஏதேனும் ஒரு தொகை இணைந்த கணக்கில் தவறுதலாக வரவு வைக்கப்பட்டால், அத்தொகை ஓய்வூதியதாரரின் இணைந்த கணக்கிலிருந்து அல்லது தனிப்பட்ட கணக்கிலிருந்து திரும்பப்பெறப்படும்.

சட்டப்பூர்வமான வாரிசுதாரர்கள், பின் வருவோர் எழுதிக் கொடுக்கும் அதிகாரம் பெற்றோர் ஆகியோரும் இணைந்த கணக்கில் தவறுதலாக வரவு வைக்கப்பட்ட பணத்தை திருப்பிக் கொடுக்கவேண்டிய பொறுப்பிலுள்ளார்கள்.

**c.** ஓய்வூதியதாரரின் வாழ்க்கைத் துணைவருடன் இணைந்த கணக்கிற்கு ஓய்வூதிய நிலுவைகளை (வாரிசுரிமம்) வழங்கும் விதிகள் 1987 தொடர்ந்து பொருந்தும். இது உணர்த்துவது என்னவென்றால் விதிகள் 5 மற்றும் 6இன்பதி ஒப்புக்கொள்ளப்பட்ட வாரிசுரிமம் இருக்குமேயானால் விதிகளின்படி நிலுவைகள், வாரிசுதாரருக்கு அளிக்கப்படலாம்.

ஏற்கனவே உள்ள ஓய்வூதியதாரர்கள், இணைப்பு கணக்கில் தங்களது ஓய்வூதியம் வரவு வைக்கப்பட வேண்டுமென்று விரும்பினால் மேலே குறிப்பிட்டவாறு, ஒரு விண்ணப்பத்தை, தற்போது ஓய்வூதியம் பெற்றுக் கொண்டிருக்கும் வங்கியின் கிளையில் முறைப்படி சமர்ப்பிக்கவேண்டும். இக்கடிதத்தில் உள்ள விதிகளையும், நிபந்தனைகளையும் துணைவரின் கையெழுத்தும் இடம்பெறும். அஸ்ஸாம் அரசின் அலுவலக குறிப்பாணை No.PPG(P)92/2006/18, டிசம்பர் 12, 2007 தேதியிட்ட இக்கடித வெளியீட்டிற்கு பிறகு ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கும் இந்த விதிகள் பொருந்தும்.

**23. புதுச்சேரி அரசின் ஓய்வூதியதாரர்களுக்கு பொதுத்துறை வங்கிகள் மூலம் ஓய்வூதியம் அளிக்கும் திட்டம் – திட்டத்தில் திருத்தங்கள்**
**(Ref.DGBA.GAD.No.9036/45.05.017/2007-08, 2008 பெப்ரவரி 19 தேதியிட்டது)**

17.12.2007 அன்று, புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் தனி பொது கணக்கு உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து புதுச்சேரி அரசு பொதுத் துறை வங்கிகள் மூலம் ஓய்வூதிய வினியோகம் செய்வதை 8.1.2008 அன்று வெளியிடப்பட்ட அரசு ஆணை வெளியீட்டு எண் Ms.No.7/2008/FI(B) மூலம் திருத்தி அமைத்தது. இத்திட்டத்தில் ஓய்வூதியதாரர்கள் என்பது புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை சேர்ந்த சுதந்திரப் போராட்ட ஓய்வூதியதாரர்களும் ஆகும். திருத்தப்பட்ட திட்டத்தின்படி பொருத்தமான நடவடிக்கையை எடுக்கவேண்டிய அனைத்து முகைமை வங்கிகளும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

| வ. எண் | பத்தி எண் | இதற்காக | படிக்க |
|---|---|---|---|
| 1. | 2A(3) | இணைப்பு கிளைகள் என்பது புதுச்சேரியில் தொழில் ரீதியாக இயங்கும் பொதுத் துறை வங்கியின்கிளை. அது பணம் அளிக்கும் கிளையாகக் கூட இருக்கலாம் | இணைப்புக் கிளை என்பது சென்னையில் உள்ள பொதுத் துறை வங்கியின் கிளை |
| 2. | 10.7 | கொடுக்கும் கிளை மற்றும் இணைப்புக் கிளை இரண்டும் ஒன்றாக இருக்கும்பட்சத்தைத் தவிர பட்டியல்கள் கொடுக்கும் கிளை 4 பிரதிகளில் இணைப்பு IVஇல் பரிந்துரைக்கப்பட்ட படிவத்துடன் | இணைப்பு IVஇல் பரிந்துரைத்தபடி கொடுக்கும் கிளை பட்டியல்களின் ஐந்து பிரதிகள் தயாரிக்கப்படும். கொடுக்கும் கிளையின் பட்டியல்களின் 4 பிரதிகள் அந்தந்த பகுதிகளின் அதாவது புதுச்சேரி, |

| | | | |
|---|---|---|---|
| | | கொடுக்கப்பட வேண்டும். பின்வரும் விஷயங்களில் 3 பிரதிகள் மட்டும் தயாரிக்கப்படும். கொடுக்கும்வங்கி ஓய்வூதிய அளிப்புகளின் தகவலை இணைப்புக் கிளைக்கு ஒவ்வொரு மாதமும் 10ஆம் தேதிக்குள் அளிப்புச் சான்றிதழை பதிவு செய்யும் வசதியுடன் அனுப்ப வேண்டும். பட்டியல்களின் ஒரு பிரதி கொடுக்கும் வங்கியால் அதன் சொந்த பதிவேட்டிற்காக வைத்துக் கொண்டு பட்டியல்களின் மீதமுள்ள பிரதிகளை சான்றிதழ்களோடு பத்திகள் 14லிருந்து 14.3வரை தங்களது ஓய்வூதிய கொடுப்பாணையுடன் தொடர்புக் கிளைக்கு ஓய்வூதியதாரர்கள் அனுப்ப வேண்டும். | காரைக்கால், மாஹி, யாணம் ஆகிய இடங்களின் பிரதான கிளைகளுக்கு அனுப்பப்பட்டு, அளிக்கப் பட்டதன் சான்றிதழ் பதிவு செய்யப்பட்டு, ஓய்வூதியதாரரின் சான்றிதழ்களுடன் பத்தி 14 லிருந்து 14.3. வரை உள்ளதன்கீழ் தின அடிப்படையில் இருக்க வேண்டும். |
| 3. | 11 | பட்டியல்களின் மூன்று பிரதிகளுடன் கொடுப்பாணைகள் மற்ற அனைத்து கொடுக்கும் கிளைகளின் ஆதரவு ஆவணங்களுடன் கிடைக்கப் பெற்றவுடன், தொடர்பு கிளை ஒவ்வொரு மாதமும் 15ம் தேதிக்குள் பட்டியல்களின் 2 பிரதிகளை ஆதரவு ஆவணங்களுடன் ஓய்வூதியதாரர்களின் சார்பாக அரசாங்கத்திடமிருந்து புதுச்சேரி பாரத ஸ்டேட் வங்கிக்கு சரியான முறையில் முத்திரையிடப்பட்ட ஒப்புகை ரசீது வழங்கப்படுகிறது. பட்டியல்களின் மூன்று பிரதிகள் மற்றும் கொடுப்பு ஆலோசனைகள் கொடுக்கும் கிளைகளிலிருந்து பெற்றுக் கொண்டபின் அதற்குரிய தொடர்பு வங்கிகள் அவற்றை வைத்து கொள்ளும். | பட்டியல்களின் நான்கு பிரதிகளை அனைத்து கொடுப்பு ஆணைகள் மற்றும் கொடுக்கும் கிளை களின் தேவையான ஆதரவு ஆவணங்களுடன் அனுப்பும் அந்தப் பகுதியில் உள்ள பொதுத் துறை வங்கியின் பிரதான கிளையானது பட்டியல்களின் மூன்று பிரதிகளை பிரதிகளை அதற்குரிய ஆதரவு ஆவணங்களுடன் சுருக்கத்தையும் இணைத்து ஓய்வூதியதாரர்கள் சார்பாக அந்தந்த பணக் கருவூலங்களுக்கும், உப கருவூலங்களுக்கும் அனுப்ப வேண்டும். பட்டியலின் நான்காவது நகலையும் மற்றும் கொடுக்கும் கிளையிலிருந்து பெறப்பட்ட கொடுப்பு விவரங்கள் பிரதான கிளைகளால், சென்னையில் உள்ள தொடர்பு வங்கிகளுக்கு தெரிவிக்கப்படும் |
| 3 | 11.1 | பொதுத்துறை வங்கியின் தொடர்பு கிளையிலிருந்து பட்டியலைப் பெற்றவுடன் பாரத ஸ்டேட் வங்கி புதுச்சேரி பட்டியலை பரிசோதித்து அதிலுள்ள ஒவ்வொரு கொடுப்பும் எல்லா விதத்திலும் சரியாக உள்ளதா? மற்றும் அதற்குத் தேவையான சான்றிதழ்கள் உள்ளதா | புதுச்சேரி, காரைக்கால், மாஹி, யாணம் ஆகியவைகளின் கருவூல அலுவலகம்/உப கருவூல அலுவலகங்கள் பிரதான கிளையிலிருந்து பட்டியலைப் பெற்றவுடன் அவற்றை சரிபார்த்து எல்லா விதத்திலும் பட்டியல்கள் சரியாக இருக்கின்றனவா மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | என்பது போன்ற விவரங்களை அறியும் அதன் பின் பொதுத்துறை வங்கி வினியோகித்த ஓய்வூதியங்களின் நிகர தொகையை புதுச்சேரி அரசின் கணக்கில் பற்று வைப்பதன்மூலம் பொதுத்துறை வங்கிகளுக்கு திருப்பி அளிக்கப்படும். பற்று அறிவுறுத்தலின் பிரதி, பட்டியல்களின் பிரதிகள் மற்றும் இதர ஆதரவு ஆவணங்களுடன் தொடர்பு கிளையிலிருந்து பெறப்பட்டு புதுச்சேரி பாரத ஸ்டேட் வங்கியால் உதவி இயக்குநர் கணக்குகள் மற்றும் கருவூலங்கள் ஓய்வூதிய பிரிவு புதுச்சேரி என்ற முகவரிக்கு அனுப்பப் படும் | அதற்குரிய சான்றிதழ்கள் ஒவ்வொரு கொடுப்பதற்கும் சரியாக உள்ளதா என்று பார்த்து இவற்றுடன் பட்டியலின் இரண்டு பிரதிகளை அவற்றின் சரியான தன்மைக்கு சான்றளித்து அதற்குரிய பிரதான கிளைக்கு அனுப்பப்பட வேண்டும். அந்த மாதத்தின் கடைசி வேலை நாளில் பிரதான கிளைகள் மாதாந்திர கொடுப்பின் புள்ளி விவரங்களை அப்பகுதிக்கு உள்ள கருவூல அலுவலகம்/உப கருவூல அலுவலகத்திற்கு சரி பார்ப்பதற்காக விடிஎம்எஸ்ஸின் (VDMS) இரண்டு பிரதிகளை கருவூல /உப கருவூல அதிகாரி முறையாக சான்றளித்து பிரதானகிளைக்கு இரண்டு நாட்களில் அது கிடைத்தவுடன் அனுப்பி, பிரதானகிளை VDMSஐ தொடர்பு அலுவலகத்திற்கு நகல் அனுப்பி மூலம் கிடைத்த அதே நாளில் அனுப்ப வேண்டும். தொடர்பு அலுவலகம் VDMSஐ ஒருங்கிணைத்து அதனை, தொடர்ந்து வரும் 8வது மாதத்தில் பணம் திரும்பப் பற பொதுக் கணக்குத் துறைக்கு அனுப்பப்படும் |

**24.** அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின்மூலம் ஓய்வூதியம் வழங்குதல் – ஓய்வூதியத்தை ஓய்வூதியதாரரால் செயல்படுத்தப்படும் இணைந்த கணக்கிற்கு வரவு வைத்தல்.
**(Ref.DGBA.GAD.No.11653/45.05.013/2007-08, 2008 மே 6 தேதியிட்டது)**

மஹாராஷ்டிர அரசு ஓய்வூதியதாரரின் ஓய்வூதியம் அளிக்கும் திட்டத்தை திருத்தியமைத்து ஓய்வூதியம் அளிப்பதை ஓய்வூதியதாரரின் இணைந்த கணக்கிற்கு ஓய்வூதியத்தை வரவு வைக்க (அதாவது அவர் தன்னுடைய ஓய்வூதிய கொடுப்பு ஆணையில் குடும்ப உறுப்பினர்களில் யாருக்கு அதிகாரம் வழங்கியுள்ளாரோ அவருடன் இணைந்த கணக்கில்) கீழ்க்கண்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும்.

**a.** “முன்னவர் அல்லது உயிரோடிருப்பவர்” அல்லது “உயிரோடிருக்கும் இருவரில் ஒருவர்” என்ற முறையில் செயல்படுத்தப்படும் ஓய்வூதியதாரரின் இணைந்த கணக்கு

**b.** ஓய்வூதியதாரரின் வங்கிக் கணக்கில் ஓய்வூதியம் வரவு வைக்கப்பட்டபிறகு, அரசு/வங்கி இவற்றின் பொறுப்பு நின்று விடுகிறது. இணைந்த கணக்குதாரர், ஓய்வூதியதாரர் இல்லாத பொழுதோ அல்லது தவறுதலாக ஒரு தொகையை எடுத்துவிட்டாலோ ஓய்வூதியதாரர் தான் பொறுப்பு.

**c.** ஒரு ஓய்வூதியதாரரின் வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியம் வழங்கப் படுவதால், ஒரு ஓய்வூதியதாரரின் மரணம் அவர் இறந்த ஒரு மாதத்திற்குள் ஊதியம் மற்றும் கணக்கு அதிகாரி/கருவூல அதிகாரி/வங்கிக்கு தெரிவிக்கப்படவேண்டும். ஓய்வூதியதாரர் இறந்தபின், கருவூல அலுவலகத்தின் ஆலோசனையின்படி, வங்கி இணைந்த கணக்கை நிறுத்திவிடும்.

**d.** ஓய்வூதியதாரர் இணைந்த கணக்கு கொண்டோர்கள் சார்பாக நியமனம் செய்யாதிருந்தால் அவரது இறப்பு சமயத்தில் கணக்கில் உள்ள நிலுவைத் தொகை இணைந்த கணக்கிலிருந்து திரும்பப்பெறமுடியாது. இதற்காக, உரிய அதிகாரம் கொண்டோரிடமிருந்து வாரிசு சான்றிதழ் காண்பிக்கப்படவேண்டும். எனினும் தவறுதலாக, இணைந்த கணக்கிலிருந்து அதிக தொகை தவறுதலாக எடுக்கப்பட்டால் குடும்ப ஓய்வூதியக் கணக்கிலிருந்து திரும்ப வசூலிக்கப்படும் அல்லது ஓய்வூதியதாரரின் இணைந்த கணக்கிலிருந்து எடுக்கப்படும் அல்லது ஓய்வூதியதாரரின் இணைந்த கணக்குதாரரின் தனிப்பட்ட கணக்கிலிருந்து எடுக்கப்படும்.

**e.** ஓய்வூதியதாரர் இறந்தபின், ஏதேனும் ஓய்வூதியதொகை அவரது கணக்கில் வரவு வைக்கப்பட்டு வேறு எந்த தகவலும் இல்லாமல் இருந்தால் அந்த தொகை வங்கியால் அரசாங்கத்திற்கு திரும்பக் கொடுக்கப்படும்.

ஏற்கனவே உள்ள ஓய்வூதியதாரர்கள் ஒரு இணைந்த கணக்கில் தங்களது ஓய்வூதியத்தை வரவு வைக்க விரும்புவோர் தற்போது ஓய்வூதியம் பெறும் சம்பள மற்றும் கணக்கு அதிகாரி, மும்பை/கருவூல அதிகாரியிடம் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் அரசு விதித்துள்ள நிபந்தனைகள் மற்றும் விதிகளை ஒப்புக்கொண்டு விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவேண்டும். ஓய்வூதியதாரரிடமிருந்து பொறுப்பேற்றல் கிடைத்தவுடன் கருவூல அதிகாரி/ ஊதியம் மற்றும் கணக்கு அதிகாரி, மும்பை வங்கிகளுக்கு ஓய்வூதியதாரர்களின் இணைந்த கணக்கை செயல்படுத்திட ஆணை அளிக்கும்.

## 25. பொதுத்துறை வங்கிகளால் உத்திரபிரதேச அரசு ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் – தனது கணவன்/மனைவியுடன் ஓய்வூதியதாரர் இணைந்த கணக்காக செயல்படுத்தப்படுவதில் வரவு வைப்பது.

**(Ref.DGBA.GAD.No.H.12499/45.05.010/2007-08, 2008 ஜுன் 4 தேதியிட்டது)**

உத்தரப்பிரதேச அரசு ஓய்வூதியம் அளிக்கும் திட்டத்தை திருத்தியமைத்து ஓய்வூதியதாரர் தன்னுடைய தனிப்பட்ட அல்லது இணைந்த கணக்கிற்கு ஓய்வூதியத்தை வரவு வைக்க வழிசெய்து மத்திய அரசு ஓய்வூதிய திட்டத்திற்கு நிகராக ஆக்கியது. எனினும் அவை கீழ்க்கண்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும்.

**a.** ஓய்வூதியதாரரின் வங்கிக் கணக்கில் ஓய்வூதியம் வரவு வைக்கப்பட்டபிறகு, அரசாங்கத்தின் பொறுப்பு நின்று விடுகிறது. இணைந்த கணக்குதாரர் முறைதவறி/தவறுதலாக ஒரு தொகையை எடுத்துவிட்டாலோ அரசாங்கம் அதற்காக எந்த பொறுப்பையும் ஏற்காது.

**b.** ஒரு ஓய்வூதியதாரரின் மரணம் அவர் இறந்த ஒரு மாதத்திற்குள் கருவூல அதிகாரிக்கு தெரிவிக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் இணைந்த

கணக்கிற்கு ஓய்வூதியம் அனுப்புவதை கருவூல அலுவலகம் நிறுத்திக் கொள்ளமுடியும். எனினும் இணைந்த கணக்கிற்கு தவறுதலாக பணம் வரவு வைக்கப்பட்டால் ஓய்வூதியதாரரின் தனிப்பட்ட அல்லது இணைந்த கணக்கிலிருந்து திரும்ப வசூலித்துக்கொள்ளலாம். சட்டபூர்வ வாரிசுதாரர்கள், மரபு வழியுரிமையாளர்கள் நிறைவேற்றுனர்கள் ஆகியோர் முறைதவறி கொடுக்கப்பட்ட தொகையை திருப்பி அளிப்பதற்கு பொறுப்புடையவர்களாகிறார்கள்.

**c.** மேற்கண்ட வசதி ஏற்கனவே உள்ள/எதிர்கால ஓய்வூதியதாரர்களுக்கு பொருந்தும்.

ஏற்கனவே உள்ள ஓய்வூதியதாரர் இணைந்த கணக்கில் தங்களது ஓய்வூதியத்தை வரவு வைக்க விரும்புவோர், தாங்கள் தற்போது ஓய்வூதியம் பெற்றுக்கொண்டிருக்கும் அது தொட்ர்பான கருவூலம்/வங்கியிடம் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவேண்டும்.

அரசு ஆணைகள் 16.12.1996 மற்றும் 6.4.1985தேதியிட்டவை, 19.7.2001 தேதியிட்ட புதிய அரசாணை உடன் படிக்கப்பட்டு, அந்த அளவிற்கு திருத்தப்பட்டு மாற்றியமைக்கப்பட்டதாகக் கருதப்படும்.

**26. பொதுத்துறை வங்கிகளால் உத்திரகாண்ட அரசு ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் – தனது கணவன்/மனைவியுடன் ஓய்வூதியதாரர் இணைந்த கணக்காக செயல்படுத்தப்படுவதில் வரவு வைப்பது.**
**(Ref.DGBA.GAD.No.H.12656/45.05.010/2007-08, 2008 ஜூன் 5 தேதியிட்டது)**

உத்தரகாண்ட அரசு ஓய்வூதியதாரரின் ஓய்வூதியம் அளிக்கும் திட்டத்தை திருத்தியமைத்து ஓய்வூதியம் அளிப்பதை ஓய்வூதியதாரரின் இணைந்த கணக்கிற்கு ஓய்வூதியத்தை வரவு வைக்க கீழ்க்கண்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும்.

**a.** கருவூலம்/வங்கிக் கணக்கில் ஓய்வூதியதாரரின் ஓய்வூதியம் வரவு வைக்கப்பட்டபிறகு, அரசாங்கத்தின் பொறுப்பு நின்று விடுகிறது. இணைந்த கணக்குதாரர் முறைதவறி/தவறுதலாக ஒரு தொகையை எடுத்துவிட்டாலோ அல்லது ஏதாவது நடவடிக்கையில் ஈடுபட்டால் ஓய்வூதியம் வழங்காணையின்படி அவற்றிற்கு முழுவதுமாக ஓய்வூதியதாரர் அல்லது அவரோடு இணைந்த கணக்குதாரரே இதற்கு பொறுப்பாளியாவார்.

**b.** ஓய்வூதியம் என்பது ஓய்வூதியதாரரின் வாழ்நாளில் மட்டுமே பெறக்கூடிய ஒன்றாகும். ஆகவே அத்தகையவர் இறந்தவிட்டால், உடனடியாக வங்கி/கருவூல அதிகாரிக்கு தெரிவிக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் தொடர்ந்து இணைந்த கணக்கிற்கு ஓய்வூதியம் அனுப்புவதை கருவூல அலுவலகம் நிறுத்திக் கொள்ளமுடியும். எனினும் இணைந்த கணக்கிற்கு தவறுதலாக பணம் வரவு வைக்கப்பட்டால் ஓய்வூதியதாரரின் தனிப்பட்ட அல்லது இணைந்த கணக்கிலிருந்து திரும்ப வசூலித்துக்கொள்ளலாம். சட்டபூர்வ வாரிசுதாரர்கள், மரபு வழியுரிமையாளர்கள் நிறைவேற்றுனர்கள் ஆகியோர் முறைதவறி கொடுக்கப்பட்ட தொகையை திருப்பி அளிப்பதற்கு பொறுப்புடையவர்களாகிறார்கள்.

**c.** தனி நபர் கணக்குடைய ஓய்வூதியதாரர்கள் அரசு ஆணை 8.11.1985 தேதியிட்ட புதிய அரசாணை உடன் படிக்கப்பட்டு, அந்த அளவிற்கு திருத்தப்பட்டு மாற்றியமைக்கப்பட்டதாகக் கருதப்படும். இதர நிபந்தனைகளும் விதிகளும் மாற்றமின்றி இருக்கும்.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவம் 1ஐ பூர்த்திசெய்து சமர்ப்பித்து வருங்காலத்தில் ஓய்வு பெற விரும்புபவர் கூட்டாக வங்கிக்கணக்கை ஆரம்பிக்கலாம். தற்போது கருவூலம்/வங்கி ஓய்வூதியம் பெறும் தனி நபர் கணக்குடைய ஓய்வூதியதாரர்கள் ஒரு கூட்டுக்கணக்கை இதன் பொருட்டு ஆரம்பிக்க கருவூலம்/வங்கியில் விண்ணப்பிக்கலாம்.

**27. பொதுத்துறை வங்கிகள் மூலம் மேற்குவங்காள அரசு ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் –ஓய்வூதியம் வழங்கும் சீட்டு. (Ref.DGBA.GAD.No.H.12704/45.05.005/2007-08, 2008 ஜூன் 11 தேதியிட்டது)**

மத்திய அரசு (சிவில்) ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் நடைமுறையை ஒட்டியே தனது மாநில ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதிய சீட்டு வழங்கும் திட்டத்தை அமல்படுத்த மேற்குவங்காள அரசு தீர்மானித்துள்ளது. இதையொட்டி எல்லா ஓய்வூதியம் வழங்கும் முகவர் வங்கிகளுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதன்படி ஓய்வூதியம் ஆரம்பிக்கும்போதும் அதைத் தொடர்ந்து ஓய்வூதியத்தில் மாற்றங்கள் ஏற்படும்போதும் ஓய்வூதிய சீட்டு வழங்க வேண்டும்.

**28. பொதுத்துறை வங்கிகளால் ஒரிஸ்ஸா அரசு ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் – தனது கணவன்/மனைவியுடன் ஓய்வூதியதாரர் இணைந்த கணக்காக செயல்படுத்தப்படுவதில் வரவு வைப்பது. (Ref.DGBA.GAD.No.H.13024/45.05.010/2007-08, 2008 ஜூன் 24 தேதியிட்டது)**

ஒரிஸ்ஸா மாநில அரசு ஓய்வூதியம் அளிக்கும் திட்டத்தை திருத்தியமைத்து ஓய்வூதியம் அளிப்பதை ஓய்வூதியதாரர் மற்றும் அவரது வாழ்க்கைத்துணை ஆகியோர் இணைந்த கூட்டு சேமிப்பு/நடப்பு வங்கிக் கணக்கிற்கு ஓய்வூதியத்தை வரவு வைக்கலாம். கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வாழ்க்கைத்துணையுடன் இணைந்த ஓய்வூதியதாரரின் கணக்கு “முன்னவர் அல்லது உயிரோடிருப்பவர்” அல்லது “உயிரோடிருக்கும் இருவரில் ஒருவர்” என்ற முறையில் செயல்படுத்தப் படலாம்.

**a.** ஓய்வூதியதாரரின் வங்கிக் கணக்கில் ஓய்வூதியம் வரவு வைக்கப்பட்டபிறகு, அரசு/வங்கி இவற்றின் பொறுப்பு நின்று விடுகிறது. வாழ்க்கைத் துணைவர் தவறுதலாக பணத்தை பெற்றால்கூட மேற்கொண்டு பொறுப்பு எதுவும் இல்லை.

**b.** ஒரு ஓய்வூதியதாரரின் வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியம் வழங்கப் படுவதால், ஒரு ஓய்வூதியதாரரின் மரணம் அவர் இறந்த ஒரு மாதத்திற்குள் தெரிவிக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் இறந்தவரின் வாழ்க்கைத் துணைவருடன் சேர்ந்த இணைந்த கணக்கிற்கு மாதாந்திர ஓய்வூதியத்தை ஓய்வூதியதாரரின் மரணத்திற்குபிறகு அனுப்புவது நிறுத்தப்படும். எனினும் ஏதேனும் ஒரு தொகை இணைந்த கணக்கில் தவறுதலாக வரவு வைக்கப்பட்டால், அத்தொகை ஓய்வூதியதாரரின் இணைந்த கணக்கிலிருந்து அல்லது தனிப்பட்ட கணக்கிலிருந்து திரும்பப்பெறப்படும். சட்டப்பூர்வமான வாரிசுதாரர்கள், பின் வருவோர் எழுதிக் கொடுக்கும்

அதிகாரம் பெற்றோர் ஆகியோரும் இணைந்த கணக்கில் தவறுதலாக வரவு வைக்கப்பட்ட பணத்தை திருப்பிக் கொடுக்கவேண்டிய பொறுப்பிலுள்ளார்கள்.

ஓய்வூதியதாரர்கள் பின்வரும் உறுதிமொழியை வங்கிக்கு எழுத்துமூலம் அளிக்கவேண்டும். அதன்படி அவரின் சட்டப்படி வாரிசுதாரர், மரபு வழியுரிமையாளர், நிறைவேற்றுனர் ஆகியோர் முறைதவறி கொடுக்கப்பட்ட தொகையை திருப்பி அளிப்பதற்கு பொறுப்புடையவர்களாகிறார்கள்.

**c.** ஓய்வூதியதாரரின் வாழ்க்கைத் துணைவருடன் இணைந்த கணக்கிற்கு வாழ்க்கைத்துணையை நியமிக்கப்பட்டவராக கொண்ட ஓய்வூதிய வங்கிக்கணக்கில் நிலுவைகளை வரவு வைக்கப்படலாம். ஆனால் அதற்காக ஒரு நிபந்தனை உண்டு. ஒரிஸ்ஸா கருவூல வழிமுறை எண் 1இல்,SR 318ன்படி படிவம் Aயில் உள்ளபடி ஒப்புக்கொள்ளக் கூடிய நியமனப்படிவம் அளித்திருக்கவேண்டும்.

ஏற்கனவே உள்ள ஓய்வூதியதாரர்கள், இணைப்பு கணக்கில் தங்களது ஓய்வூதியம் வரவு வைக்கப்பட வேண்டுமென்று விரும்பினால் மேலே குறிப்பிட்டவாறு, ஒரு விண்ணப்பத்தை, தற்போது ஓய்வூதியம் பெற்றுக் கொண்டிருக்கும் வங்கியின் கிளையில் முறைப்படி சமர்ப்பிக்கவேண்டும். இக்கடிதத்தில் உள்ள விதிகளையும், நிபந்தனைகளையும் துணைவரின் கையெழுத்தும் இடம்பெறும், ஒரிஸ்ஸா அரசின் அலுவலக குறிப்பாணை No.26848, மே 24, 2008 தேதியிட்ட இக்கடித வெளியீட்டிற்கு பிறகு ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கும் இந்த விதிகள் பொருந்தும்

**29. கோவா அரசு ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் –ஓய்வூதியம் வழங்கும் சீட்டு. (Ref.DGBA.GAD.No.924/45.05.012/2008-09, 2008 ஜூலை 23 தேதியிட்டது)**

மத்திய அரசு ஓய்வூதியதாரர்களுக்கு இணையாக மாநில ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதிய சீட்டு வழங்கும் திட்டம் குறித்து மாநில நிதித்துறை செயலர்கள் மாநாட்டில் விவாதிக்கப்பட்டது. மத்திய அரசு ஓய்வூதியதாரர்களுக்கு அளிக்கப்படுவது போலவே ஓய்வூதியம் ஆரம்பிக்கப்படும்போதும், மாற்றங்கள் அதில் செய்யப்படும்போதும், ஓய்வூதியச் சீட்டு ( குறிப்பிட்ட வடிவத்தில்) வழங்கும் முறையை கோவா அரசு அமல்படுத்திடத் தீர்மானித்துள்ளது. இதற்கேற்ப தங்களது கிளைகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்குமாறு முகவர் வங்கிகளுக்கு குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

**30. தொலைத்தொடர்பு ஓய்வூதியதாரர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் மூலம் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் – ஓய்வூதியதாரர் தனது வாழ்க்கைத்துணையுடன் வைத்துள்ள இணைந்த கணக்கில் ஓய்வூதியத்தை வரவு வைத்தல். (Ref.DGBA.GAD.No.H.1917/45.05.001/2008-09, 2008 ஆகஸ்ட் 21 தேதியிட்டது)**

மத்திய அரசு ஓய்வூதியக் கணக்கை அலுவலகத்துடன் (CPAO) கலந்தாலோசித்து பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது. ஓய்வூதியதாரர் அவருக்குப்பின் குடும்ப ஓய்வூதியம் பெற ஓய்வூதிய ஆணையில் குறிக்கப்பட்டுள்ள அதிகாரப்பூர்வ அங்கீகரிக்கப்பட்ட நபருடன் இணைந்து பராமரித்துவரும் அங்கீகரிக்கப்பட்ட வங்கிக்கணக்கில் ஓய்வூதியம் வரவு வைக்கப்படலாம். இவ்வசதி தொலைதொடர்புத் துறை மற்றும் BSNL ஓய்வூதியதாரர்களுக்கு உண்டு. இந்த

கூட்டான வங்கிக்கணக்கு "முன்னவர் அல்லது உயிரோடிருப்பவர்" அல்லது "உயிரோடிருக்கும் இருவரில் ஒருவர்" என்ற முறையில் செயல்படுத்தப்படும். ஆனால் மத்திய அரசின் தொலைத் தொடர்பு, தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சகம், புதுதில்லியிலிருந்து வெளியிடப்படும் பொதுநிலை அலுவலக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இது குறித்து அனைத்து முகவர் வங்கிகளும் தங்கள் ஓய்வூதியம் அளிக்கும் கிளைகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

**31. அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் மூலம் ஆந்திரபிரதேச அரசு ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் - ஓய்வூதியதாரர் தனது வாழ்க்கைத்துணையுடன் வைத்துள்ள இணைந்த கணக்கில் ஓய்வூதியத்தை வரவு வைத்தல். (Ref.DGBA.GAD.No.H.1918/45.05.016/2008-09, 2008 ஆகஸ்ட் 21 தேதியிட்டது)**

ஆந்திரபிரதேச மாநில அரசின் ஆணையில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள உறுதிமொழிப் பத்திரத்தை அரசு ஓய்வூதியதாரரின் வாழ்க்கைத்துணை அளிக்கவேண்டும். இந்த நிபந்தனையின்பேரில் ஓய்வூதியதாரரும் அவரது வாழ்க்கைத்துணையும் சேர்ந்து பராமரிக்கும் ஓய்வூதிய வங்கிக்கணக்கில் ஓய்வூதியத்தை வரவு வைக்க ஆந்திரபிரதேச அரவு ஒப்புக்கொண்டுள்ளது. இதையொட்டி, ஓய்வூதியம் வழங்கும் கிளைகளுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறு முகவர் வங்கிகள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

**32. வாடிக்கையாளர் சேவை குறித்த பிரபாகர்ராவ் கமிட்டியின் பரிந்துரைகள் – ஓய்வூதியம் வழங்குதல் (Ref.DGBA.GAD.No.H.3085/45.01.001/2008-09, 2008 அக்டோபர்1 தேதியிட்டது)**

ஓய்வூதியம் வழங்குதல் குறித்த பிரபாகர்ராவ் கமிட்டியின் பரிந்துரைகளை ஏற்பதென்று தீர்மானிக்கப்பட்டது. அதன்படி பின்வருமாறு முடிவெடுக்கப் பட்டது. கமிட்டியின்பரிந்துரைகளை கடைப்பிடிப்பதோடு வங்கிக்கிளைகள் தங்களின் உள்ளகத்தணிக்கயாளர் மற்றும் ஆய்வாளர்களுக்கு தக்கவிதத்தில் அறிவுறுத்தல்களை வழங்கவேண்டுமென்று முகவர் வங்கிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. சோதித்தறியவேண்டிய பட்டியல் ஒன்றை இணைத்து அவர்களுக்கு அனுப்பி அவை வங்கிகளில் கடைப்பிடிக்கப் படுகின்றனவா என்பது குறித்தும் மேலும் வாடிக்கையாளர் சேவையின் தரம் குறித்தும் ஒரு அறிக்கையை தணிக்கையாளர் மற்றும் ஆய்வாளர் சமர்ப்பிக்க வேண்டும். ரிசர்வ் வங்கியின் அதிகாரிகள் வங்கிகளை ஆய்வுசெய்து வரும்போது அந்த அறிக்கைகள் அவர்களுக்கு தரப்பட வேண்டும்.

**33. ஆறாவது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமல் செய்யும் அரசின் முடிவு – 2006க்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் திருத்தியமைக்கப்படுதல் (Ref.DGBA.GAD.No.H.3699/45.01.001/2008-09, 2008 அக்டோபர் 17 தேதியிட்டது)**

மத்திய அரசு, பணியாளர் அமைச்சகம், பொதுப்புகார் மற்றும் ஓய்வூதியம், புதுதில்லி, ஜனவரி 2006 முதல் 2006 ஆண்டுக்கு முன் பணி ஓய்வு பெற்ற அனைத்து ஓய்வூதியதாரர்/குடும்ப ஓய்வூதியதாரரின் ஓய்வூதியம் குறித்த விதிமுறைகளுக்கு தனது No.38/37/08 P&PW(A), செப்டம்பர் 1,2008 தேதியிட்ட கடிதம் மூலம் ஒப்புதல்

அளித்துள்ளது. இந்த ஆணை பின்வருபவர்கள் அனைவருக்கும் பொருந்தும். ஜனவரி 1,2006 அன்று மத்திய அரசு(சிவில்) ஓய்வூதிய விதிகள் 1972ன்கீழ் ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறும் நபர்கள் மத்தியசிவில் (சிறப்பு) ஓய்வூதிய விதிகள், அனைத்திந்திய சேவைகளில் இரயில்வே ஓய்வூதியதாரர், இந்திய சிவில் சர்வீஸ் பணி ஓய்வு பெற்றவர்கள் (ஜனவரி 1, 1973 முதல் ஓய்வூதியம் பெறும் மேற்கண்ட நபர்கள்) ஆகியோருக்கும் பொருந்தும். உயர்நீதிமன்றம், உச்ச நீதிமன்ற நடுவர்கள், அரசியல் சாசனம்/சட்டரீதியான அதிகாரிகள் போன்ற தனி விதிகள்/ ஆணைகளுக்கும் உட்பட்ட நபர்களுக்கு மேற்பட்ட ஆணைகள் பொருந்தாது.

ஆகவே இதையொட்டி, ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும்போது அரசின் பரிந்துரைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

**34. மத்திய அரசு/சிவில்/இராணுவம்/இரயில்வே/தொலைதொடர்பு/விடுதலை போராளிகள்/மாநில அரசு ஓய்வூதியதாரர்கள் போன்றவர்களுக்கு ஓய்வூதியம் பொதுத்துறை வங்கிகள் மூலம் வழங்குதல் – பொதுத்துறை வங்கிகள் ஓய்வூதியத்தை வழங்கும் நாட்கள் பட்டியலை மாற்றியமைத்தல்**
**(Ref.DGBA.GAD.No.H.7652/45.05.031/2008-09, 2009 மார்ச் 3, தேதியிட்டது)**

ஒவ்வொரு மாதத்தின் கடைசி 4 நாட்களில் ஓய்வூதியம் வழங்கப்படவில்லை என்று அதிக அளவில் புகார்கள் வருகின்றன. முகவர் வங்கிகள் மாதத்தின் கடைசி நாளில் கிளைகளுக்கு வழங்கப் படுகின்றது. இதனால் மாதத்தின் கடைசி நாளில் ஓய்வூதியதாரர்கள் பெரிய வரிசையில் அதிக நேரம் நின்று ஓய்வூதியம் பெற நேரிடுகிறது.

இவ்விஷயம் குறித்து ஜுன் 1,1995 தேதியிட்ட நமது முந்தைய சுற்றறிக்கை எண் GA.NB.307/45.01.001/94-95யில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை மீண்டும் வலியுறுத்துகிறோம். இதன்படி எல்லா ஓய்வூதியம் வழங்கும் முகவர் வங்கிக்கிளைகள் ஓய்வூதியத்தை மார்ச் மாதம் தவிர மாதத்தின் கடைசி 4 நாட்களில் பரவலாக்கி வழங்குமாறு வேண்டுகிறோம். மார்ச் மாதத்தில் மட்டும் ஓய்வூதியம் ஏப்ரல் மாதத்தின் முதல் வேலை நாளில் வரவு வைக்கப்படும்.

**35. ஓய்வூதிய சீட்டு/ஓய்வூதியம் வழங்கும் முகவர் வங்கிக்கிளைகள் ஓய்வூதிய வழங்காணையைத் திருத்தியமைத்தல்**
**(Ref.DGBA.GAD.No.H.9326/45.01.001/2008-09,2009 ஏப்ரல் 29 தேதியிட்டது)**

முகவர் வங்கிகள் ஓய்வூதியச்சீட்டுகள் மற்றும் மாற்றியமைக்கப்பட்ட ஓய்வூதிய வழங்காணைகள் அளிக்கும்படி உரிய அறிவுறுத்தல் வழங்கப்பட்டு இருப்பினும் ஓய்வூதிய வழங்கும் வங்கிக்கிளைகள் ஓய்வூதியச் சீட்டுகள் வழங்குவதில்லை என்ற புகார்கள் அதிக அளவில் ஓய்வூதியதாரர்கள் சங்கத்திலிருந்து வருகின்றன. இதோடு, அரசுகளின் வழங்காணைகளின் மாற்றம் ஏற்படும்போது இரு பாதி சீட்டுகளிலும் அடிப்படை ஊதியம் மாற்றியமைக்கப் படுவதில்லை என்ற புகார்களும் எழுகிறது. மண்டல அலுவலகத்தின் பொதுக் கணக்குப் பிரிவிலிருந்து முகவர் வங்கிகளுக்கு ஆய்வுக்கு செல்கின்ற அதிகாரிகள் ஓய்வூதியச் சீட்டு மற்றும் வழங்காணைகள் சரியாக மாற்றியமைத்து ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படுகிறதா என்பதைக் கண்காணித்து, தங்களின் சிறப்பான கருத்துக்களை அதுபற்றி கூறுமாறு அறிவுறுத்துகிறோம்.

**36. அதிகப்படியாக வழங்கப்பட்ட ஓய்வூதியத்தை அரசு கணக்கில் திருப்பி அளித்தல். (Ref.DGBA.GAD.No.H.10450/45.03.001/2008-09, 2009 ஜுன் 1 தேதியிட்டது)**

அதிகப்படியாக ஓய்வூதியம் வழங்கிவிட்டால் அதை மீண்டும் அரசுக் கணக்கில் மொத்தமாக வரவு வைக்கப்படுவதில்லை. அதற்கு பதிலாக தவணைகளில் ஓய்வூதியதாரரிடமிருந்து பெறும் தவணைகளில் திருப்பித் தரப்படுகிறது. இதனால் அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே எப்போது முகவர் வங்கி அதிகம்/அதிகப்படியாக ஓய்வூதியம் வழங்கியது கண்டுபிடிக்கப்பட்டால் அந்த தொகை உடனடியாக ஒட்டுமொத்தமாக அரசு கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.

தொகுப்பு சுற்றறிக்கையில் அடங்கியுள்ள சுற்றறிக்கைகள் ஆன பட்டியல்

| வ. எண் | சுற்றறிக்கை எண் | தேதி | விவரங்கள் |
|---|---|---|---|
| 1. | DGBA.GAD.No.4-416/45.01.003/2002-03 | 2003 மார்ச் 21 | மாநில அரசின் ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலை நிவாரணம் பற்றிய அரசாணைகளை மாநில அரசுகளின் இணையதளங்களில் வெளியிடுவது |
| 2. | DGBA.GAD.No.H.506/45.01.001/2002-03 | 2003, ஏப்ரல் 12 | மத்திய அரசின் ஓய்வூதியதாரர்களுக்கு பொதுத்துறை வங்கிகள் மூலம் ஓய்வூதியம் வழங்கப்படும். ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலை நிவாரணம் அளிப்பதில் தாமதத்தைக் குறைத்திட அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் அகவிலை நிவாரணம் தொடர்பாக அரசாணைகளை ரிசர்வ் வங்கி மூலம் அனுப்புவதை கைவிடுவது. |
| 3. | DGBA.GAD.No.770/ 45.01.003/ 2003-04 | 2004 பிப்ரவரி 25 | ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலை நிவாரணம் பற்றிய சுற்றறிக்கைகள் ரிசர்வ் வங்கி இணையதளங்களில் வெளியிடுவது |
| 4. | (RBI/2006/296) (Ref: DGBA.GAD.No.H 11303/45.01.003/2005-06 | 2006 பிப்ரவரி 6 | பொதுத்துறை வங்கிகள் மூலம் ஓய்வூதியம் வினியோகிக்கப்படுதல் – அகவிலை நிவாரணம் அளிக்கப்படுதல் |
| 5. | DGBA.GAD.No.H 94/45.05.031/2004-05 | 2004 ஆகஸ்ட் 24 | படிவம் ‘A’ மற்றும் ‘B’ ஆகியவற்றில் நியமனத்தை ஒப்புக்கொள்ளுதல் – மத்திய பொது ஓய்வூதியம் |
| 6. | DGBA.GAD.No.H 3611/45.03.002/2005-06 | 2005 அக்டோபர் 10 | ரயில்வே ஓய்வூதியதாரர்கள் விஷயத்தில் ஓய்வூதிய நிலுவைத் தொகையை அளிப்பதற்கு நியமனங்களை (படிவம் ‘A’ மற்றும் ‘B’) ஒப்புக் கொள்ளுதல் |
| 7. | DGBA.GAD.No.H 602-644/45.01.001/2004-05 | அக்டோபர் 7, 2004 | அகில இந்திய சேவை அதிகாரிகள், மத்திய அரசுப்பணியில் இருக்கும் நிலையில் ஓய்வு பெறும்பொழுது ஓய்வூதியம் மற்றும் இதர ஓய்வூதிய நன்மைகளை அளிப்பதை அமல்செய்யும் நடைமுறை |
| 8. | DGBA.GAD.No.H 867-899/45.02.001/2004-05 | 2004 அக்டோபர் 18 | இராணுவ ஓய்வூதியதாரர்களுக்கு பொதுத்துறை வங்கிகள் மூலம் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் – ஓய்வூதியம் அளிக்கும் பட்டியல்களை சமர்ப்பிப்பதில் தாமதம் மற்றும் பொய்யான மற்றும் மோசடியான பணம் செலுத்துதல்களை தவிர்க்க நடவடிக்கைகள் |
| 9. | RBI/2005/334/DGBA.GAD.No.H.3389-3421/45.02.01/2004-05 | 2005 ஜனவரி 6 | பொதுத்துறை வங்கிகளால் ரயில்வே ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் – மோசடியாக பணம் வழங்குதலைத் தடுத்திட நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| 10. | DGBA.GAD.No.H.3452-3485/45.01.001/2004-05 | 2005 ஜனவரி 11 | மத்திய பொது ஓய்வூதியம் அளித்தல் – ஓய்வூதியம் அளிக்கும் ஆணைகளின் பி.பி.ஓ.க்கள் (PPO) இரு பாதிகளிலும் அகவிலை நிவாரணம் பதிவு செய்தல் |
| 11. | DGBA.GAD.No.6073/45.05.031/2004-05 | 2005 மே 30 | ரயில்வே ஓய்வூதியத்தை முகமை வங்கிகள் மூலம் வினியோகிப்பது – வங்கிகள் அளவிற்குமேல் பணம் அளித்துவிடக்கூடிய சில முக்கிய பகுதிகள் |
| 12. | DGBA.GAD.No.H.10746/45.03.001/2005-06 | 2006 ஜனவரி 24 | பொதுத்துறை வங்கிகள் மூலம் ரயில்வே ஓய்வூதியத்தாரர்களுக்கு, ஓய்வூதியம் வழங்கும் திட்டம் – இரயில்வே அமைச்சகத்தின் மூலம் ஏழு புதிய மண்டலங்களுக்கு நிதியியல் ஆலோசகர் மற்றும் தலைமை கணக்கு அலுவலர்களை நியமித்தல் |
| 13. | DGBA.GAD.No.12736/45.03.001/2005-06 | 2006 பிப்ரவரி 24 | அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் மூலம் ஓய்வூதியம் வழங்குதல் – ஓய்வூதியதாரரின் வாழ்க்கைத் துணைவரோடு இணைந்து செயல்படுத்தப்படும் இணைந்த கணக்கில் ஓய்வூதியத்தை வரவு வைத்தல்) |
| 14. | DGBA.GAD.No.H-2134/45.02.001/2006-07 | 2006 ஆகஸ்ட் 4 | அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் மூலம் ஓய்வூதியம் வழங்குதல் – ஓய்வூதியதாரரின் வாழ்க்கைத் துணைவரோடு சேர்ந்து ஓய்வூதியத்தை வரவு வைத்தல் |
| 15. | DGBA.GAD.No.6926/45.05.005/2006-07 | 2006 அக்டோபர் 30 | மேற்கு வங்க அரசு ஓய்வூதியதாரர்களுக்கு பொதுத்துறை வங்கிகள்மூலம் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் (பகுதி A) – ஓய்வூதியதாரரின் வாழ்க்கைத் துணைவரோடு இணைந்து செயல்படுத்தப்படும் இணைந்த வங்கிக்கணக்கில் ஓய்வூதியத்தை வரவு வைத்தல் |
| 16. | DGBA.GAD.No.H.8973/45.05.003/2006-07 | 2006 நவம்பர் 24 | பொதுத்துறை வங்கிகள்மூலம் பஞ்சாப் அரசின் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் |
| 17. | DGBA.GAD.No.H-13834/45.02.001/2006-07 | 2006 மார்ச் 13 | இராணுவ ஓய்வூதிய வழங்கலை அளிப்பதற்கு ஒற்றைச் சாளர முறையை அறிமுகப்படுத்துதல் |
| 18. | DGBA.GAD.No.H.14279/45.05.024/2006-07 | 2006 மார்ச் 23 | அருணாசலப் பிரதேஷ் அரசின் ஓய்வூதியதாரர்களுக்கு பொதுத்துறை வங்கிகள்மூலம் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் |
| 19. | DGBA.GAD.No.H.10975/45.05.031/2006-07 | 2007 ஜனவரி 9 | பொதுத்துறை வங்கிகள் மூலம் மத்திய அரசு ஓய்வூதியத்தை வினியோகித்தல் – ஓய்வூதியச் சீட்டை அளித்தல் |
| 20. | DGBA.GAD.No.H.17663/45.05.031/2006-07 | 2007 ஜுன் 12 | பொதுத்துறை வங்கிகள் மூலம் மத்திய அரசு ஓய்வூதியத்தை வினியோகித்தல் – இராணுவ ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியச் சீட்டை அளித்தல் |
| 21 | DGBA.GAD.No.H.3856/45.05.031/2007-08. | 2007 அக்டோபர் 8 | பொதுத்துறை வங்கிகள் மூலம் மத்திய அரசு ஓய்வூதியத்தை வினியோகித்தல் – ரயில்வே ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியசீட்டுகளை |

| | | | |
|---|---|---|---|
| | | | வழங்குதல் |
| 22 | DGBA.GAD.No.7570 /45.05.018/2007-08 | 2008 ஜனவரி 15 | பொதுத்துறை வங்கிகளால் அஸ்ஸாம் அரசு ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் – தனது கணவன்/மனைவியுடன் ஓய்வூதியதாரர் இணைந்த கணக்காக செயல்படுத்தப்படுவதில் வரவு வைப்பது |
| 23 | DGBA.GAD.No.9036 /45.05.017/2007-08 | 2008 பெப்ரவரி 19 | புதுச்சேரி அரசின் ஓய்வூதியதாரர்களுக்கு பொதுத்துறை வங்கிகள் மூலம் ஓய்வூதியம் அளிக்கும் திட்டம் – திட்டத்தில் திருத்தங்கள் |
| 24 | DGBA.GAD.No.1165 3/45.05.013/2007-08 | 2008 மே 6 | அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின்மூலம் ஓய்வூதியம் வழங்குதல் – ஓய்வூதியத்தை ஓய்வூதியதாரரால் செயல்படுத்தப்படும் இணைந்த கணக்கிற்கு வரவு வைத்தல் |
| 25 | DGBA.GAD.No.H. 12499/45.05.010/20 07-08 | 2008 ஜுன் 4 | பொதுத்துறை வங்கிகளால் உத்திரபிரதேச அரசு ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் – தனது கணவன்/மனைவியுடன் ஓய்வூதியதாரர் இணைந்த கணக்காக செயல்படுத்தப்படுவதில் வரவு வைப்பது |
| 26 | DGBA.GAD.No.H. 12656/45.05.010/20 07-08 | 2008 ஜுன் 5 | பொதுத்துறை வங்கிகளால் உத்திரகாண்ட அரசு ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் – தனது கணவன்/மனைவியுடன் ஓய்வூதியதாரர் இணைந்த கணக்காக செயல்படுத்தப்படுவதில் வரவு வைப்பது |
| 27 | DGBA.GAD.No.H. 12704/45.05.005/20 07-08 | 2008 ஜுன் 11 | பொதுத்துறை வங்கிகள் மூலம் மேற்குவங்காள அரசு ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் –ஓய்வூதியம் வழங்கும் சீட்டு |
| 28 | DGBA.GAD.No.H. 13024/45.05.010/20 07-08 | 2008 ஜுன் 24 | பொதுத்துறை வங்கிகளால் ஒரிஸ்ஸா அரசு ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் – தனது கணவன்/மனைவியுடன் ஓய்வூதியதாரர் இணைந்த கணக்காக செயல்படுத்தப்படுவதில் வரவு வைப்பது |
| 29 | DGBA.GAD.No.924/ 45.05.012/2008-09 | 2008 ஜுலை 23 | கோவா அரசு ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் –ஓய்வூதியம் வழங்கும் சீட்டு |
| 30 | DGBA.GAD.No.H. 1917/45.05.001/200 8-09 | 2008 ஆகஸ்ட் 21 | தொலைத்தொடர்பு ஓய்வூதியதாரர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் மூலம் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் – ஓய்வூதியதாரர் தனது வாழ்க்கைத்துணையுடன் வைத்துள்ள இணைந்த கணக்கில் ஓய்வூதியத்தை வரவு வைத்தல் |
| 31 | DGBA.GAD.No.H. 1918/45.05.016/200 8-09 | 2008 ஆகஸ்ட் 21 | அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் மூலம் ஆந்திரபிரதேச அரசு ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் - ஓய்வூதியதாரர் தனது வாழ்க்கைத்துணையுடன் வைத்துள்ள இணைந்த கணக்கில் ஓய்வூதியத்தை வரவு வைத்தல் |
| 32 | DGBA.GAD.No.H. 3085/45.01.001/200 8-09 | 2008 அக்டோபர் 1 | வாடிக்கையாளர் சேவை குறித்த பிரபாகர்ராவ் கமிட்டியின் பரிந்துரைகள் – ஓய்வூதியம் |

| | | | |
|---|---|---|---|
| | | | வழங்குதல் |
| 33 | DGBA.GAD.No.H. 3699/45.01.001/2008-09 | 2008 அக்டோபர் 17 | ஆறாவது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமல் செய்யும் அரசின் முடிவு – 2006க்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் திருத்தியமைக்கப்படுதல் |
| 34 | DGBA.GAD.No.H. 7652/45.05.031/2008-09 | 2009 மார்ச் 3 | மத்திய அரசு/சிவில்/இராணுவம்/இரயில்வே/ தொலைதொடர்பு/விடுதலை போராளிகள்/ மாநில அரசு ஓய்வூதியதாரர்கள் போன்றவர்களுக்கு ஓய்வூதியம் பொதுத்துறை வங்கிகள் மூலம் வழங்குதல் – பொதுத்துறை வங்கிகள் ஓய்வூதியத்தை வழங்கும் நாட்கள் பட்டியலை மாற்றியமைத்தல் |
| 35 | DGBA.GAD.No.H. 9326/45.01.001/2008-09 | 2009 ஏப்ரல் 29 | ஓய்வூதிய சீட்டு/ஓய்வூதியம் வழங்கும் முகவர் வங்கிக்கிளைகள் ஓய்வூதிய வழங்காணையைத் திருத்தியமைத்தல் |
| 36 | DGBA.GAD.No.H.10450/45.03.001/2008-09 | 2009 ஜுன் 1 | அதிகப்படியாக் வழங்கப்பட்ட ஓய்வூதியத்தை அரசு கணக்கில் திருப்பி அளித்தல் |